ஜநவிநோதினி.

R. R. No. 142 2-1890.

ஊ 3 புஸ் 21.

மார்ச் 1890.

C

JL
ஈ211, M82JA.
M90.3.21
146680

14
2-1890

# JANAVINODINI.

# ஜநவிநோதிநி.

இல. 3.] மார்ச்சுமீ 1890. [புஸ்த. XXI.

CONTENTS.

Which does the most to make the Orator—Knowledge, Nature, or Art? *(Continued.)* .. 49
The ungrateful shall never prosper—A story *(Continued.)*........ 56
Never break your promise.......... 63
The Life of a Bear, Chapter XIX.......................... 66
Different modes of celebrating Marriages.......................... 68
The Customs and Manners of the Laplanders.......................... 70
News and Notes.......................... 72

அட்டவணை.

நாவுணர்ச்சி, இயற்கைஞானம், பழக்கம் ஆகிய இவற்றுள் பிரசங்கசக்திக்கு முக்கியமான காரணம் யாது? (தொடர்ச்சி).............. 49
நன்றிமறப்போர் நலமடையார்—ஓர் கதை (தொடர்ச்சி.)............ .... 56
சொற்சோர்வுபடேல்.................... 63
ஓர் கரடியின் கதை, 19-ம் அத்தியாயம்......................... 66
விவாக பேதங்கள்........ ........... 68
லாப்லாண்ட் தேசத்தாருடைய அப்பியாசங்கள்.......................... 70
வர்த்தமானக் குறிப்புகள்.............. 72

MADRAS.

Published by the

MADRAS SCHOOL BOOK AND VERNACULAR LITERATURE SOCIETY,

OLD COLLEGE, NUNGUMBAKAM.

146680

# ஜ்ஞாநவிநோதிநீ.

இல. 3.] மார்ச்சுமீ 1890. [புஸ்த. XXI.

## நூலுணர்ச்சி, இயற்கைஞானம், பழக்கம் ஆகிய இவற்றுள் பிரசங்கசக்திக்கு முக்கிய காரணம் யாது?

(தொடர்ச்சி.)

பிரசங்கசக்தி ஒருவனுக்கு இயற்கையில் அமையத்தக்கதேயன்றி வேறுவகையினுல் அமையத்தக்கதல்லவென்று மனோரதர் என்னும் வித்வசிரோன்மணி அபிப்பிராயந்தெரிவித்தபின்னர் கருணாகரர் என்னும் சாஸ்திரியார் எழுந்திருந்து அடியில்வருமாறு உபந்நியசிக்கலாயினர்:—

இராஜாதிராஜனே! நீராவியினுல் இயக்கப்படுகின்றதொரு சூத்திரக்கருவி எவ்வளவு சிறந்ததாயும் எவ்வளவு [illegible]யைச் செய்யத்தக்கதாயு மிருந்தபோதிலும் அதை இயக்க நிலக்கரிமுதலிய வஸ்துக்களிராவிடில் அக்கருவிக்கு அவ்வளவு அற்புதமான சக்தியமைவது அரிது; அதுபோல ஒருவன் அனேகரை ஏககாலத்தில் மயக்கித் தன்வயப்படுத்தத்தக்க வாசகசாமர்த்தியம் பெற்றிருந்தபோதிலும் நூலுணர்ச்சியினுலே விஷயங்களின் யுக்தாயுக்தத்தை அவன் அறிந்திராவிடில் அவனுடைய சாமர்த்தியம் அவ்வளவும் பயனற்றதாய்முடியும். ஒருவிளக்கைப்பிரஸ்தாப விஷயத்திற்கு உபமானமாக எடுத்துக்கொள்வோம். ஒரு கலசத்தில் எண்ணெய்வார்த்து வர்த்திபோட்டுத் தீபம் ஏற்றுகிறோம்; அதைத் தூண்டுவதற்காக ஒருதுரும்புவேண்டும். இந்த அங்கங்களெல்லாம் - தீபம் சுடர்விட்டெரிவதற்கு அவசியமானவை. அதுபோல் ஒருவன் ஒருவிஷயத்தை எடுத்துப் பிரசங்கித்துப் பலருடைய அஞ்ஞானவிருளையோட்டி மெய்ஞ்ஞான விளக்கேற்றவேண்டுமானுல் அவன் நூலுணர்ச்சி, இயற்கைஞானம், பழக்கம் ஆகிய மூன்றையும் அடைந்திருக்கவேண்டும். இயற்கைஞானத்தையே கலசமாகவும், நூலுணர்ச்சியையே நெய்யும் திரியுமாகவும், துரும்பையே பழக்கமாகவுங் கூறலாம். இம்மூன்றனுள் கலசமும் துரும்பும் ஏதோ அசந்தர்ப்பத்தினுல் அகப்படாவிடில் ஒருவன் வர்த்தியை எண்ணெயில் தோய்த்துக்கையிற் பிடித்து

க்கொண்டிருந்தாலுமே விளக்கெரிந்துகொண்டிருக்கும். எண்ணெயும் வர்த்தியுமிராவிடில் தீபம் அமைவது முற்றும் அசாத்தியம். அதுபோல் இயற்கையில் ஒருவனுக்குப் பிரசங்கசக்தி அமையாவிடினும் பிறகுபழக்கமும் இராவிடினும் பாதகமின்று. நூலுணர்ச்சியினால் உண்டாகவேண்டிய விஷயஞானம் மாத்திரம் பிரசங்கசக்திக்கு அத்தியாவசியம். யானெடுத்துக்காட்டிய உபமான உபமேயங்களை இன்னும்யான் விரித்துக்காட்டுவது அநாவசியம். நூலுணர்ச்சியே பிரசங்கசக்திக்கு முக்கியமான கருவியென்பது என்கோட்பாடு.

பின்பு கலாரத்னாகரர் என்னும் புலவர்எழுந்திருந்து தம்முடைய கருத்தை அடியில் வருமாறு தெரிவிக்கலாயினார்:—

அரசரேறே! கருணாகரர்சொல்லிய விஷயம் எவ்வளவும் என் மனதுக்குப் பொருத்தமாகத் தோன்றவில்லை; பிரசங்கசக்தி ஒருவனுக்கு இயற்கையில் அமையத்தக்கதொரு குணமாயிருக்கிறதென்றே நான்நினைக்கிறேன். ஏனெனில், சமயோசிதமாக யுக்தி செய்வதும், எத்தனைகல்விமான்கள் ஒன்றாய்க்கூடி ஒருசபையிலிருந்தபோதிலும் மனோதைரியத்துடன் ஒருவன் தன்கருத்தை எடுத்துச்சொல்வதும் இயற்கையில்அமையத்தக்க குணங்களாயிருப்பவையாக நாம் அநுபவத்திற்காணலாம். அநேகர்தாம் ஒருசபையிற்போய்ப் பேசுவதற்குமுன்பாக, இன்னவிஷயத்தை இன்னவரிசைக்கிரமப்படி இன்னசமயத்தில் சொல்லலாமென்று தீர்மானித்துக்கொண்டுபோயும் அத்தருணத்தில் தாம் எதிர்பாராத ஒருவிஷயத்தைப்பற்றித் திடீ[illegible] சமயோசிதமான ஒருவியாயத்தைச் சொல்லநேரிடும்போது திகைத்துப் பிரமித்துப் பசபசவென்று விழிக்கிறார்கள். சமயோசித யுக்தி இயற்கையில் அமையப்பெற்ற ஒருவன் ஆயிரம்பெயர் ஒருங்குகூடிச்செய்த ஒருதீர்மானத்தை ஒருநொடியில் ஒருகேள்வியினாலே மாற்றிவிடக்கூடும். அன்றியும் அநேகர் மிகுந்த சாஸ்திரஞானம் அடைந்தும் தம்மினும் குறைந்த ஞானமுடையவர்கள்கூடியிருக்கும் சபையிலுங் கூட ஒருவிஷயத்தைப் பேசுவதற்கு வாயைத்திறக்கும்போது மெய்வெயர்த்து நடுநடுங்கி நாக்குழறித் தடுமாற்றமடைகிறார்கள். ஏனெனில், அவர்களுக்கு மனோதிடமும் தேகபலமுமில்லையா. மனோதிடம் இயற்கையில் அமையவேண்டிய குணமென்பதை யாவரும் ஒப்புக்கொள்வார்கள். ஆகையால் பிரசங்கசக்தி இயற்கையில் அமையத்தக்கதென்பது என்மதம்.

பின்பு சத்தியசந்தனர் என்னும் புலவர் எழுந்திருந்து அடியில் வருமாறு தம்முடைய அபிப்பிராயத்தைத் தெரிவித்தனர்:—

மண்டலேசா! எனக்குமுன் அபிப்பிராயந் தெரிவித்த நண்பர்களுக்குள்ளே நூலுணர்ச்சியே பிரசங்கசக்திக்கு முக்கியகாரணமென்று கூறியவருடையகருத்தே என்கருத்தாகவுமிருக்கின்றது. [illegible]னாலே விஷயஞானமொன்றுமாத்திரம் ஒருவனுக்கு



ப்பூரணமாயமைந்திருக்குமானால் உண்மையை எடுத்து ஒருசொல்லினாலாவது கைமுதலிய அவயவத்தைக்கொண்டு சைகையினாலாவது விளக்குவதேபோதும். அவ்வாறு உண்மையை விளக்கித் தன் கருத்தை நிறைவேற்றிக்கொள்வோனெவனோ அவனே நாவலனாவான். எப்படியெனின், ஒரு கொல்லற்றுக்காரன் வீடுகட்டுவதில் எவ்வளவு சாமர்த்தியனாயிருந்தபோதினும் கல், மண், சுண்ணம் முதலிய முதற்காரணங்களமையாவிடில் அவனுடைய சாமர்த்தியம் எவ்வளவும் பயனில்லாமற்போகுமல்லவா? ஆகையால் ஒருவன் நூலுணர்ச்சியை மாத்திரம் நன்றாய்ப்பெற்று விஷயஞானம் அடைந்திருப்பானாயின் அவனே பிரசங்கத்திற்கு வேண்டிய முக்கிய சாதனத்தைக் கொண்டவனாவான்.

அ[illegible] என்னும் விற்பனர் எழுந்து அடியில் வருமாறு தம்முடைய மனோபீஷ்டத்தைப் புலப்படுத்தினார்:—

மஹாராஜாவே! இப்போது சத்தியசந்தனர் சொன்ன விஷயம் எனக்கு மஹா விந்தையாயிருக்கின்றது. கல், மண், சுண்ணம் முதலியவற்றை ஒருபெருங் குவியலாக ஓரிடத்தில் சேர்த்துவைப்பாமாகில் அது ஒரு அழகானகட்டடமாகுமோ? அப்பொருள்களைப் பிரமாணப்படி சேர்த்து அமைக்குந் திறம் வாய்க்காவிடில் அப்பொருள்களெல்லாம் பெருங் குப்பையாகவே இருக்கும். அதுபோல் ஒருவன் அளவிறந்த நூல்களை வாசித்து அநேகவிஷய ஞானங்களைப்பெருங் குவியலாகத் தன்மனவிடையில் சேர்த்துவைத்திருப்பானாயினும், அவற்றுள் இன்னின்னவற்றை இன்னின்னசமயத்தில் இவ்வவ்வளவு எடுத்துப்பிரயோகிக்கவேண்டுமென்கிற விஷயத்தை அவனறியாவிடில் அவனுடைய சாஸ்திரக்கியானம் அவ்வளவும் வீணாம்; ஆகையால் முயற்சியாகிய பழக்கமே பிரசங்கசக்திக்கு முக்கியகாரணமென்பது என்னுடைய கோட்பாடு.

இதற்குமேல் குணாதீதர் என்னும் அறிவாளர் அடியில் வருமாறு கூறலாயினார்:—

மஹாப்பிரபு! பிரசங்கசக்தி ஒருவனுக்கு இயற்கையில் அமையத்தக்கதென்று சுந்தரர், மனோரதர், கலாரத்னாகரர் ஆகிய இவர்கள் கூறிய அபிப்பிராயமே எனக்கு உடன்பாடு. அவையஞ்சாமைக்கு முக்கியகாரணமாயுள்ள மனோதைரியம் ஒருவனுக்கு இயற்கையில் அமையத்தக்ககுணமென்று மனோதத்துவ சாஸ்திரிகள் ஒப்புக்கொள்வார்கள். அன்றியும் நாவலனாயுள்ள ஒருவனுக்குச் சுவாசக்கருவிகள் இயற்கையில் பலமாயிருத்தல்வேண்டும். அக்கருவிகள் இயற்கையிலே பலஹீனமாயொருவனுக்கிருக்குமாயின் அவைகளை எவ்வகையான முயற்சியினாலும் பலப்படுத்திக்கொள்வது முடியாத காரியம். அப்படிப்பட்டவன் எவ்வளவு நன்றாகச் சாஸ்திர ஆராய்ச்சி செய்தவனாயிருக்கினும், எவ்வளவு விஷயஞானம் [illegible]

னாயிருக்கினும், எவ்வளவுநாள் பிரசங்கத்திற்றென்று பழகினவனாயிருக்கினும் அவன் அதிசீக்கிரத்தில் ஜனங்களால் அருவருக்கப்படுவான். இன்னும் விரிக்கிற்பெருகும்.

இதுகேட்டுக் கிருபாகரர் அடியில் வருமாறு தம்முடைய கருத்தைத் தெரிவிக்கலாயினர்:—

வேந்தர்வேந்தே! பிரசங்கிப்பவனுக்கு மனோதைரியமிருப்பது அத்தியாவசியமென்றும் அது இயற்கையிலே விளையத்தக்க ஒருகுணமென்றும் குணநிதர் சொல்லி முடித்தனர். அவருடைய கோட்பாடு எனக்கு மிகவும் விந்தையாயிருக்கின்றது. ஒருவனுக்கு எந்தச் சமயத்தில் மனோதைரியம் இருக்கும்? எந்தச்சமயத்தில் ஸ்திரமற்போகும்? என்கிற விஷயத்தை மனோதத்துவசாஸ்திரப்படி சிறிது ஆலோசித்துப்பார்ப்போம். ஒருவன் [illegible] முன்னிலையில் சொல்லப்போகும் விஷயம் சுருதி யுக்தி அநுபவத்திற்கு ஒத்திருக்கிறதென்றும், தான் சொல்லப்போகும் விஷயத்திற்கு என்னவிதமான ஆட்சேபனையுண்டானபோதினும் அதற்குத்தகுந்த சமாதானம் கூறத்தக்க அவ்வளவு நியாயம் தனக்குத் தெரிந்திருக்கிறதென்றும் மனத்திருப்தி யடைந்திருப்பானாயின் அவனுக்கு ஒருபோதும் பிரசங்ககாலத்தில் மனோதைரிய மிராமற்போகாது. அப்படிக்கன்றி எவனொருவன் தான் சொல்லப்போகும் விஷயத்தைப் பற்றித் தனக்குள்ளேயே சந்தேகங்கொள்ளுகிறானோ அவன் தனக்குப் போதுமானவரையில் மனோதிட மில்லாமையினாலே, யார் எந்த மூலையில் என்ன [illegible] ஆட்சேபனை செய்யப்போகிறார்களோ? அதற்கு நாம் கூறும் சமாதானம் பொருந்துமோ பொருந்ாதோ? அவ்வாறு நாம் சமாதானம் கூறச் சக்தியற்றிருக்கும்போது மற்றவர்கள் நம்மைப்பார்த்து நகைத்தால் என்செய்வது? என்னும் இவைபோன்ற தோற்றங்களினாலே பிரசங்கிக்கும்போது அப்படிப்பட்டவன் மனோதைரியத்தை இழக்கிறான். ஆகையால் மனோதைரியத்திற்கு முக்கியமான காரணம் என்னவென்றால்-ஒருவன் சொல்லப்போகும் விஷயத்தைச் சந்தேகமற முன்னே அறிந்திருப்பதேயாம். மனோதத்துவ சாஸ்திரத்தைப்பற்றிய இந்த சித்தாந்தத்தை யோசித்துப்பார்க்கையில், ஒருவனுக்கு நூலுணர்ச்சியே பிரசங்கசக்தியைக் கொடுப்பதற்குக் காரணமென்று தோன்றுகிறது. சுவாசகருவிகள் முதலிய உறுப்புகள் இயற்கையிலேயே பலமாயிருந்தாலன்றி ஒருவன் பிரசங்கிக்க உதவானென்றும் குணநிதர் அபிப்பிராயம் தெரிவித்தார். ஆதியில் டிமாஸ்தினிஸ் முதலியோருடைய வாழ்நாட்சரித்திரத்தை வாசித்துப்பார்க்கையில், இயற்கையிலுள்ள இவைபோன்ற பலஹீனங்களைவிடாமுயற்சியும் பழக்கமும் நீக்கிவிடுமென்று தெரியவருகிறது. டிமாஸ்தினிஸ் என்பவர் தெற்றுவாயைப் போக்கிக்கொள்வதற்காகக் கூழாங்கற்களை வாயிற்போட்டுக்கொண்டும், பலஹீனமாயிரு



ந்த சுவாசக் கருவியைப் பலப்படுத்திக்கொள்வதற்காகச் செங்குத்தானமலைகளின்மீது ஏறிப்பழகியும், கடற்கரையோரத்தில் நின்று உரக்கக்கூவிப்பழகியும், அபிநயவிஷயங்களில் அவருக்கிருந்த குறைவுபாடுகளை நிலைக்கண்ணாடியைப்பார்த்து நாளாவர்த்தியிற் பழகியும் போக்கிக்கொண்டார். இம்மட்டோ? பேசும்போது அடிக்கடி தோளை நெளித்து நெளித்துக் குலுக்குவது அவருக்கு இயற்கையிலிருந்த ஓர் அவலட்சணம். இக்குறைவுபாட்டை அவர் தம்முடைய தோள்களைத் தொடும்படி கூர்மையான ஈட்டியைத் தொங்கவிட்டு வைத்துத் தனியேயிருந்து பேசிப் பழகிவந்தார். இவைபோன்ற பற்பல வழக்கங்களினாலே அவர் பிரசங்கத்தில் ஒப்புயர்வில்லாப் பெருமையடைந்தனர். ஆகையால் விடாமுயற்சியினாலும் பழக்கத்தினாலும் ஆகாததும் உண்டோ? இந்நியாயங்களை யோசித்துப்பார்க்கையில், நூலுணர்ச்சியும் பழக்கமும் பிரசங்கசக்திக்கு இன்றியமையாதவைகளென்று யான் அபிப்பிராயப்படுகிறேன். இவ்விரண்டனுள் ஒன்றை நீக்கி மற்றொன்றை விசேஷமாகக் கூற என்மனம் துணியவில்லை. பிரசங்கசக்தி ஒருவனுக்கு இயற்கையில் அமைந்த குணமென்பது மாத்திரம் எனக்கு எவ்வளவும் உடன்பாடல்ல.

இவ்வாறு இவர் சொல்லி முடித்தபின் பரலோசனர் என்பவர் எழுந்திருந்து அடியில் வருமாறு கூறலானார்:—

ராஜசிங்கமே! எவனொருவன் எந்த விஷயத்தை வேறொருவருடைய மனதில் நன்றாய்ப் பசுமரத்தாணிபோல் பதியவேண்டுமென்று நினைக்கிறானோ அவன் அந்தவிஷயத்தைப்பற்றித் தானே தன் மனதில் திடமான உணர்ச்சிபெற்றிருக்கவேண்டும். ஒருவன் [illegible] ஒருபக்தருடைய சரித்திரத்தை யெடுத்துப் பிரசங்கிக்கிறானென்று வைத்துக்கொள்வோம். அவன் தான் சொல்லும்விஷயத்தில் பூரண நம்பிக்கையுள்ளவனாய்த் தன்னுடைய மனம் நெக்குருகக் கசிவடைந்து அச்சரித்திரத்தைச் சொல்லுவானாகில், அவன் சொல்வதில் எவ்வளவு பிழையிருந்தபோதினும் அவன் எவ்வளவு சொற்சாதுரிய மற்றவனாயிருக்கினும் அது கேட்போருடைய மனங்களைக்கவர்ந்து அவர்களைக் கண்ணீரும் கம்பலையுமாயிருக்கச்செய்யும். சிலர் தக்கன் யாகத்தை நாடகமாகப் போட்டுவிக்கையில் வீரபத்திருடைய வேஷம் பூண்டுவருபவனுக்கும், தக்கன்வேஷம் பூண்டிருப்பவனொருவனுக்கும் வாஸ்தவத்தில் அந்தரங்கத்திலே எவ்வித துவேஷமுமிராவிடினும், வீரபத்திரர் வேஷம்பூண்டவன் அந்நாடக சந்தர்ப்பத்தில் தக்கன் யாகத்தை அழிப்பதற்காக வெளிவரும்போது அவன்மேல் எதார்த்தத்தில் மனதிலே ஒருவகைக் கோபங்கொண்டாலன்றி அவ்வீரபத்திருடைய வேஷம்பூண்டவன் யாகசாலையில் சரியாய் நடிப்பது கூடாது. நாடகத்தில் அதிசாமர்த்தியம் பெற்றவராயுள்ள சிலர் இப்படிப்பட்ட வேஷங்களைக் கொள்ளும்போது தாம் பூண்டவேஷத்திற்கேற்ற தோற்றங்களை மனதில் எதார்த்தத்திலே வகித்துக்கொள்ளுகிற

படியால் அவர்களுடைய செய்கைகள் அதியற்புதத்தை விளக்கின்றன. இவ்வாறே பிரகலாத ஆழ்வாருடைய சரித்திரத்தை ஓரிடத்தில் நாடகமாகப் போட்டுவித்துக்கொண்டு வருகையில், இரணியனை வதைப்பதற்காகப் பொற்றூணிலிருந்தும்வெளிவந்த நரசிம்மஸ்வாமியுடைய வேஷம்பூண்ட ஒருவன் இரணிய வேஷம் பூண்ட மற்றொருவனுடைய வயிற்றை எதார்த்தத்திற் கிழித்துக் கோபாவேசத்தால் அவனைக்கொன்றனும். அவ்விருவரும் [illegible]ஸ்தவத்தில் மிகச்[illegible] நேசர்கள். அப்படியிருந்தும் நரசிம்மவேஷம்பூண்ட ஒருவன் அவ்வேஷத்திற்கேற்ற கோபங்கொண்டானதலின் அந்நாடகம் அவ்வளவு அற்புதமாய்நடந்தது. அந்த சந்தர்ப்பத்தில் கொலைநடந்ததென்று ஒருபுறத்தில் யாம் [illegible]க்கிக்க வேண்டியதாயிருந்தபோதிலும் நாடகருடைய சாமர்த்தியத்தை மற்றொருபுறத்தில் நாம் வியக்கவேண்டியதாயிருக்கிறதல்லவோ? அதுபோல எவனொருவன் தான் சொல்லும் விஷயத்தைப்பற்றித் திடமான உணர்ச்சியைத் தான் பெற்றிருக்கின்றானோ அவனே அதைக் கேட்போருடைய மனதிற் பதியும்படி பிரசங்கிக்கத் தக்கவனாவான். ஆகையால் பிரசங்கியாய் வெளிவரும் ஒருவன் தான்சொல்லும் விஷயத்தைப்பற்றிப் பூரணவிஷய உணர்ச்சிபெற்றிருப்பானாயின் அவனே சாமர்த்தியவானாவான்.

இவ்வாறு சதானந்தர் முதலாகப் பாலலோசனர் ஈறான பதினொரு சாஸ்திரிகளும் தத்தம் அபிப்பிராயங்களைத் தெரிவித்து மழைபெய்துவிட்டதுபோல் உபந்யாசங்கள் செய்து முடித்தபின் பத்மநாபன் [illegible]ரென்னும் வித்வசிரோன்மணியை நோக்கி, இனி உம்முடைய அபிப்பிராயத்தை யறியயான் அவாவுடையவனாயிருக்கிறேனென்று சொல்ல, அவர் எழுந்திருந்து, மஹாராஜாவே! இதுவரையில் சொல்லிவந்தவர்களைப்போல் யான் அபிப்பிராயங் கொடுக்கப்போகிறதில்லை, யான் கூறப்போகும் விஷயத்தினால் உமக்கு மனஸ்தாபம் உண்டாகாதிருக்குமாயின் யான் வஞ்சனையில்லாமல் என்னுடைய கருத்தைச் சொல்லுகிறேனென்றார். அதுகேட்டுப் பத்மநாபன் - சுவாமீ! இங்கிருக்கும் எல்லோரைக்காட்டிலும் தேவரீர் மஹாபெரியவர், மேலும் துறவி, இங்குள்ள அனைவரும் கடைத்தேறும் பொருட்டே தேவரீரை யான் வருந்தி வரவழைத்து இச்சமுகத்தில் வைத்துக்கொண்டது, ஆகையால் தேவரீர் என்னவிதமான அபிப்பிராயம் சொன்னபோதிலும் அதை நாங்கள் அனைவரும் ஒப்புக்கொள்ளச் சர்வசித்தமாயிருக்கிறோமென்று சொன்னான்.

அதுகேட்டுப் பக்தசகாயர் அடியில் வருமாறு முடிவுசொல்லலாயினர்:—

மண்டலேஸ்வரா! ஒருவன் உலகத்தில் உயிர்வாழ்வதற்கு அன்னம் முக்கியகாரணமா? ஜலம்முக்கியகாரணமா? வாயுமுக்கியகா



ரணமா? என்று கேட்கும் வினாவைப்போல், பிரசங்கசக்தி விஷயமாகத் தேவரீர் வினாகேட்டிருக்கிறீர்கள். மேலே சொல்லப்பட்ட மூன்றனுள் ஒவ்வொன்றும் ஒருவனுடைய உயிர்வாழ்க்கைக்கு எப்படி இன்றியமையாததோ அப்படியே பிரசங்கசக்திக்கு நூலுணர்ச்சியும் முக்கியகாரணந்தான், பழக்கமும் முக்கிய காரணந்தான். தீபம் எரிவதற்கு எப்படி கலசமும் நெய்யும் திரியும் முக்கியமான கருவிகளோ அப்படியே பிரசங்கசக்திக்கும் பிரஸ்தாப மூன்றுவிடயங்களும் அத்தியாவசியமானவைகளே. ஒருவன் இயற்கையில் விவேக சூனியனாயிருப்பானாயின் அவனுக்கு எவ்விதமான நூலுணர்ச்சியும் பழக்கமும் பயன்படமாட்டா. இயற்கையில் ஒருவனுக்கு எவ்வளவு விவேகமிருந்தபோதினும் நூலுணர்ச்சியினாலும் பழக்கத்தினாலும் அதைத்திருத்தாவிடில் அது எவ்வளவும் அபிவிர்த்தியடைய மாட்டாது. ஆகையால் மூன்றும் முக்கியமென்றே ஏற்படுகின்றது. அதற்கு ஏற்றபடியே இப்போது பேசிக்கொண்டுவந்த எனதுடைய ஆப்தர்களும் ஒவ்வொரு விஷயத்தைப்பற்றியும் ஒன்றுக்கொன்று தோல்வியடையாத சமமான அபிப்பிராயங்களையே தெரிவித்திருக்கிறார்கள்.

இது கேட்டுப் பத்மநாபன் அடியில் வருமாறு இவ்விஷயத்தை முடிவுசெய்தான் :—

பண்டிதர்களே! எந்தத்தேசமானது நாகரீகத்தில் சிறக்க வேண்டுமோ அந்தத் தேசத்திலுள்ளார் பெரும்பான்மை பிரசங்கசக்தி அமையப்பெற்றவர்களாயிருக்கவேண்டும். ஏனெனில், உலகத்திலுள்ள சர்வ ஜீவராசிகளினும் நாவைக்கொண்டு பேசும் சக்தியைக் கடவுள் மனிதர்களுக்குத்தான் கொடுத்திருக்கின்றார். அப்படியிருக்க, எவனொருவன் தனக்குக் கடவுளால் கொடுக்கப்பட்ட அருமையான நாவென்னும்கருவியைக்கொண்டு தன்னுடைய உள்ளக்கருத்தைப் பிறர்க்கு வெளிப்படுத்தாமலும், தான் கற்ற கல்வியைப் பலர்க்கும் பயன்படச் செய்யாமலு மிருக்கின்றானோ அவன் ஈஸ்வரன் தனக்குக்கொடுத்த நற்கொடையைத் துர்விநியோகம் செய்தவனாவான். கிரீஸ் - ரோம் முதலிய தேசங்கள் முற்காலத்தில் மேன்மைபெற்றிருந்ததற்குக் காரணமெல்லாம் பிரசங்கசக்தியை அவர்கள் அக்காலத்தில் மிக்வும் அபிவிர்த்தி செய்து வந்ததேயாம். அப்படிப்பட்டதை அபிவிர்த்திசெய்வதற்கு இக்காலத்திலே கல்விச் சாலைகளில் முயற்சிசெய்யாமலிருப்பது பெருங்குறைவேயாம். பக்தசகாயர் தெரிவித்தகருத்தே எனக்கும் உடன்பாடாகும். ஆனால் பிரசங்கசக்திக்கு முக்கியகாரணங்களாயுள்ள மூன்றனுள் முக்கியமாயுள்ளது இதுவென்று யான் ஆதியில் கேட்ட கேள்வி அவ்வளவாகச் சரியானதல்லவென்று பக்தசகாயர் தமக்குள்ளே எண்ணிக்கொண்டதாக நான் அபிப்பிராயப்படுகிறேன். அப்படிப்பட்ட கேள்வி நான் கேட்டபடியினாற்றானே மூன்றும் முக்கிய காரணங்களென்று விளங்

கின. ஒருவிஷயத்திற்குக் காரணமாயுள்ள பலவற்றுள்ளும் முக்கியமான தெதுவென்று கேட்பதனாலுண்டாகும் பெரும் பிரயோசனம் என்னவென்றால், அப்படிப்பட்ட ஒவ்வொரு காரணத்தைப்பற்றியும் யுக்தாயுக்தமான நியாயங்களை நீங்கள் யாவரும் நன்றாயெடுத்துக் காட்டுவதனால் உண்மை வெளியாவதேயாம். இந்நோக்கத்தைக் கொண்டேதான் யான்சில சந்தர்ப்பங்களில் இவ்வாறான கேள்விகளைக் கேட்கின்றேன்.

இவ்வாறு பத்மநாபன் பேசியபிறகு சபை கலைந்து எல்லோரும் தத்தம் இருப்பிடம் போய்ச்சேர்ந்தார்கள்.

## நன்றிமறப்போர் நலமடையார்.

(தொடர்ச்சி.)

சற்றுநேரம் மகிபன் மூர்ச்சையடைந்து பிறகு பிரக்ஞை தெளிந்து பகவானைநோக்கி, எம்பெருமானே! யான்மனதறிய எவர்க்கும் எவ்வகையான தீமையும் செய்தவனல்லன், அவ்வாறிருந்தும் யானினித் தப்பிப் பிழைக்கவழியிராதபடி இத்தகைய போராபத்திற் குள்ளாயினேன்,

"நீயெப்படி வகுத்தாலுநன்றே நின்பெருங்கருணை
தாயொத்தடியார்க்கருள் சச்சிதானந்ததற்பரமே."

என்று பலவாறாகத் தோத்திரஞ்செய்து,

"ஈண்டுநீர்வையத்துளெல்லாரு மெத்துணையும்
வேண்டார்மற்றீயவிழைபயனல்லவை
வேண்டினும்வேண்டாவிடினுமுறற்பால
தீண்டாவிடுதலரிது."

இவ்வுலகத்துள் துன்பத்தை எவரும் எவ்வளவும்விரும்புவதில்லை, யாவரும் இன்பத்தையே விரும்புவார்கள், அவ்வாறிருந்தும்அவரவர்களுக்கு அந்தந்தக் காலங்களில் அந்தந்த இடத்திலே விளையவேண்டிய சுகதுக்கங்கள் அவர்கள் விரும்பினும் விரும்பாவிடினும் வந்தேயடையுமென்று பொருள்பட மூதறிஞர்கூறிய பிரமாணங்களை நினைப்பூட்டிக் கொண்டு மனந்தேறினான்.

இவ்வாறு மகிபனைத் துன்பத்துக்காளாக்கிய பயங்கரன் செய்த காரியத்தைப் பார்த்துக்கொண்டிருந்த அவ்விரண்டு தையலாருந் துக்கசாகரத்தில்மூழ்கினவர்களாகி ஐயோ! முறையோ! என்றுபலவாறலறித் தமக்கு உயிர்ப்பிச்சை நல்கிய மகிபனை நினைந்து நினைந்து அழுதார்கள். அவர்களைப்பார்த்து பரமதுன்மார்க்கனாகிய பயங்கரன்-ஓ பெண்களே! எவன் எப்படியானால்தான் உங்களுக்கென்ன? உங்களுடைய க்ஷேமத்தை நீங்கள் பாருங்கள், உங்களைக் கொண்டுபோய்க்கலிங்க



பட்டினத்திற் சேர்க்கின்றேன், வாருங்களென்று அவர்களையிட்டுக்கொண்டுபோனான். அவனைப் பின்தொடர்ந்த அப்பெண்மணிகள் இப்பரமசண்டாளனுடையமுகத்தில் விழிப்பதும் மஹாபாதகத்திற்கு ஹேதுவாகுமென்று கருதியபோதிலும் வேறே கதியற்று அவன் பின்னே சென்றார்கள். பயங்கரனும் இவர்களையிட்டுக்கொண்டு நெடுநாளாக யாத்திரைசெய்து கலிங்கபட்டினம்போய்ச் சேர்ந்து, இராஜகுமாரனாகிய மகிபனை தானென்று நடித்து அக்கலிங்கபட்டினத்து அரசிளங்குமரியை யானையினின்றும் தானே விடுவித்ததாகவும், பிறகு இராட்சசனைக் கொன்று தானே அவளைக் கொண்டுவந்ததாகவும் பொய்ப்பிரதாபங்கூறி அவ்வரசனை நம்பும்படி செய்தான். இதைக்கேட்டிருந்த அரசனுடைய புதல்வி பயங்கரன் சொல்லிக்கொண்டுவந்த பொய்மொழிகளை மறுக்காமல் மேல் விளைவதைப் பார்ப்போமென்று மௌனமாயிருந்துவிட்டாள். இவற்றையெல்லாங்கேட்ட கலிங்கபட்டினத்தரசன் பயங்கரன் சொல்லி வந்ததையெல்லாம் நம்பி, தான் முன்னே வாக்குத்தத்தஞ்செய்தபடியே தன்னுடைய அருமைப்புதல்வியையும் காலகாந்தபுரத்து அரசனது குமாரியையும் அவனுக்கு ஏககாலத்தில் மணஞ்செய்விக்கப் பிரயத்தனங்கள் செய்யத்தொடங்குகையில், அவ்விரண்டு பெண்மணிகளும் அரசனைநோக்கி, ஐயனே! நாங்கள் நெடுங்காலம் சிறைப்பட்டு அதனால் பிரஷ்டை யடைந்திருந்தபோது எங்களுடைய இஷ்டதேவதைகளுக்குச் சில பிரார்த்தனைகள் செய்துகொண்டோம், அவற்றை முடிக்கச் சில விரதங்களை நாங்கள் அநுஷ்டிக்கவேண்டியதா யிருக்கிறபடியால், ஆறுமாதகாலம்வரையிலே இவ்விவாஹ மகோற்சவத்தைநிறுத்திவைக்கக் கேட்டுக்கொள்ளுகிறோமென, அதற்கரசனுடன்பட்டு அப்படியே விவாகத்தை நிறுத்திவைத்துப் பயங்கரனுக்குமாத்திரம் தன் வாக்குதத்தப்படி அன்றே தன் அரசைக்கொடுத்துஇராச்சிய பட்டாபிஷேகம் சம்பிரமமாய்ச்செய்வித்தான். அது நிற்க.

பாதாளலோகத்தில் வீழ்ந்து தியங்கிக்கொண்டிருந்த மகிபன் வரலாற்றை இனிக்கூறுவோம். அவன் லோகநாயகரை நோக்கிப் பலவாறு துதித்துக்கொண்டிருக்கையில் அவர் அவனுடைய பக்திக்கிரங்கி அவன் நினைத்தஉருக்கொண்டு அவன் முன்னேவந்து தோன்றி, மைந்தனே! உனக்கு யாதுவேண்டும்? என்றார். அதற்கு அவன் சுவாமி! யான் நினைக்கும்போது கருடவடிவுகொள்ள வேண்டுமென்று குறையிரந்தான். பகவான் அவ்வாறே அவனுக்கு வரமளித்துவிட்டு மறைந்தருளினார். சில நாளானபின் அவ்வரத்தின் மேன்மையினால் மகிபன் ஒரு கருடப்பட்சி உருவெடுத்துக்கொண்டு, முன்னே சங்கிலித்தொடர் பூட்டியிருந்த வழியாகப் பாதாளலோகத்தினின்றும் மேலெழும்பிப் பூலோகத்திற்குவந்து மீண்டுந்தன் இயற்கைவடிவை எடுத்துக் கொண்டு ஒருவரும் தன்னை அறியாதபடி மாறுவேஷம்பூண்டு காலகாந்தபுரத்திற்குப்போய்ச் சேர்ந்தான். சிறிது காலத்திற்குமுன்னே அவ்வூர் அரசிளங்குமரியைத் தேடிக்கொண்டுவருவதாக உறுதிமொழிகூ

றி ஒரு நீண்ட சங்கிலித்தொடரை வாங்கிப்போன மகிபனென்னும் இராஜகுமாரன் திரும்பினானா? என்று அவன் சிலரை அங்கேகேட்க அவர்கள் இல்லையென்று மறுமொழிகூற, மகிபன் அங்கிருந்து புறப்பட்டு ஓரெளிய யாசகனைப்போல் வேஷம்பூண்டு அனேக காடு-மலை-கானயாறு முதலியவற்றைக் கடந்து நெடுநாள் யாத்திரைசெய்து முடிவில் கலிங்கபட்டினத்திலே ஒரு வீட்டில்வந்து சேர்ந்தான். அக்கலிங்கபட்டினத்து இராஜகுமாரியைத் தேடிக்கொண்டு வருவதாகச் சொல்லிப்போன மகிபன் என்னும் இராஜகுமாரன் அவ்வாறே கொண்டுவந்தனனா? என்று அங்கு சிலரை அவன்கேட்க, அவர்கள்-ஆம், அந்தமஹாவீரன் யானையைக்கொன்று அவளையும் காலகாந்தகபுரத்து இராஜகன்னிகையையும் கொண்டுவந்தானென்றும், அவனுக்கு மூன்றுமாதத்திற்கு முன்னேதான் இராச்சிய பட்டாபிஷேகம் ஆயிற்றென்றும், அக்கன்னியரிருவரும் ஓர்வகை விரதத்தை இப்போது அநுஷ்டித்து வருகிறார்களென்றும், இன்னும் மூன்றுமாதங் கழித்து அவ்விருவரும் அவனை மணந்செய்வார்களென்றும் சொல்லக்கேட்டு, பரதேசி வேஷம்பூண்ட மகிபன் அவ்வூரில் சில வீடுகள்தோறும் பிச்சையெடுத்துக்கொண்டு சிலநாள் ஜீவித்துவந்தான். மகிபன் தன்னுடைய சாமர்த்தியத்தினாலும் தெய்வகடாட்சத்தினாலும் தப்பித்துக்கொண்டு ஒருவேளை இவ்வூர்க்கு வருவானென்று எதிர் பார்த்த பயங்கரன்-அந்நகர் சோதனைக்காரர்களை அழைத்து, இன்னின்ன லட்சணமுடையவொருவன் மாறுவேஷம் போட்டுக்கொண்டு எப்போதாவது இந்நகரில் எவ்விடத்திலாகிலுமிருக்க நீங்கள் கண்டீர்களாகில் உடனே அவனைப் பிடித்தபிடியாகத் தூரத்திலுள்ள காட்டுக்குக்கொண்டுபோய் அவனுடைய வலதுகரத்தையும் இடதுகாலையும் வெட்டிப் போட்டுவிட்டு வந்து விடுங்களென்று கட்டளையிட்டிருந்தானாகையால், அவர்களுடைய கண்ணில் கிரஹசாரம் போதாமல் மகிபன் அகப்பட்டுக்கொண்டான். உடனே அவர்கள் அவனைப்பிடித்துக் காட்டுக்குக் கொண்டுபோய் அவனுடைய வலதுகரத்தையும் இடதுகாலையும் வெட்டிப் போட்டுவிட்டுவந்தார்கள்.

உடனே மகிபன்-ஓ ஜகதீசா! கெடக்கெட்டியதுவாய்க் கெட்டவில்லையென்னும் பழமொழி ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் எனக்குத்தானா பலிக்கவேண்டும்? இவ்வாறு இடைவிடாமல் என்னைத் துயரக்கடலில் வீழ்த்துவதைக் காட்டினும் ஒருமிக்க இவ்வுடற்பொறையை நீக்கி உன் திருவடிச் செல்வத்தை அடையும்படி நீ எனக்குக் கிருபைசெய்யலாகாதா? என் ஊழிருந்தவாறு என்னே! என்னே! இனியான் தப்பி உய்யும் வழியாதோ? அறிகிலன்; சுடச்சுட மாசு நீங்கிப் பொன்னுக்கு ஒளி அதிகப்படுவதுபோல் என்னுடைய ஆத்மாவைப்பற்றிய குற்றங்களெல்லாம் இதுபோன்ற பற்பல துன்பங்களை அநுபவிப்பதனாலே நீங்கிப் புனிதப்படுமென்பதற்குச் சந்தேகமில்லையென்று இவ்வாறு ஈஸ்வரனைநோக்கிச் சிந்தித்துக் கொண்டிருக்கையில், தன்னுடைய ஆப்தனாகிய புலிவேந்தன் அவ்விடத்தில் தோன்றித் தன்னை முன்னே அவன்



விட்டுப் பிரிந்த க்ஷணந்தொடங்கி அதுவரையில் நடந்தவரலாற்றை அவன்மூலமாகக் கேட்டுத் துக்கித்து மகிபனைப்பார்த்து, ஓ பிராணநேசா! நீ அஞ்சவேண்டாம், சற்றுநேரம் இவ்விடத்தில் உன் ஆபத்தைப் பொறுத்துக்கொண்டிரு என்று சொல்லிமறைந்தது.

அங்கிருந்து புறப்பட்டு அப்புலிவேந்து தன் மரபுக்கு ஆசாரியனாகிய வியாக்கிரபாதமுனிவரிடத்திற்சென்று, சில மந்திரோபதேசம் பெற்று அதிசீக்கிரம் மகிபனிடத்திற்கு மீண்டும் வந்து அவனைப்பார்த்து, அன்பனே! இதோ உனக்கொருமந்திரம் நான் உபதேசிக்கிறேன், இதை நீ இவ்வாறு நேரே சொல்வாயானால் வெட்டுண்ட உன் அங்கங்கள் நீ வளரப்பெறுவாய், அப்படிக்கன்றி நீ இந்த மந்திரத்தைத் தலைகீழாகச் சொல்வாயானால் நன்றாயிருக்கும் அங்கங்கள் உடனே பங்கமாய்விடும், இதுவுமன்றி இதோ இன்னுமொரு மந்திரம் சொல்லுகிறேன், இதை நீ உச்சரித்துக் கொண்டிருக்கிறவரையில் எவருடைய கண்ணுக்கும் புலப்படாமல் சுகமாய்த் திரியலாமென்றுசொல்லி அம்மந்திரங்களை அவனுக்கு உபதேசஞ்செய்தது.

அவைகளை அவ்வாறே கற்றுக்கொண்ட மகிபன் அப்புலிவேந்தின் பாதத்தில் சாஷ்டாங்கமாய் விழுந்து, ஆப்தரத்னமே! உனக்கு நான் எப்போதோ செய்த ஒருசிறு உபகாரத்திற்காக நீ எனக்குச் செய்த அளவிறந்த பிரதியுபகாரங்களை யானென்னென்று கூறுவேன்!

“எழுமையெழுபிறப்புமுள்ளுவர்தங்கள்
விழுமந்துடைத்தவர் நட்பு.”

மேலோர் தங்களுக்கு ஒரு காலத்துண்டாகிய துன்பத்தை நீக்கினவர்களுடைய நட்பை எழுவகைப் பிறப்பிலும் மறவாரென்னும் வேதவாக்கியத்திற்கு உன்னைக் காட்டிலும் வேறே யார்இலக்கியமாகப்போகின்றார்கள்? நான் உன்னை என்னுடைய திருவுருவமென்றே சதாதியானித்து வருகின்றேனேயன்றி ஒரு சாதாரண புலியாக நினைப்பதில்லை, நான் துன்பப்படுங்காலத்தில் நீ எவ்வளவு எளிதில் என்முன் தோன்றுகின்றனையோ அப்படியே, இவ்வுலகத்தில் நான் ஈஸ்வர கடாட்சத்தினால் இன்பம் அநுபவிக்கவிருக்குமாயின் அத்தருணத்திலும் நான் உன்னை நினைக்கும்போதெல்லாம் எனக்கெதிர்ப்பட வேண்டுமென்று சொல்ல, அவ்வாறே ஆகட்டுமென்று வியாக்கிரபதி அவனுக்கு உறுதிமொழி கூறிமறைந்தது.

இவ்வாறு மந்திரோபதேசம்பெற்று மகிபன் ஒருவர்கண்ணுக்கும் புலப்படாதபடி கலிங்கபட்டினத்துட் பிரவேசித்து, புஷ்பங்கட்டி விற்கும் ஒரு பண்டாரச்சி வீட்டுக்குச்சென்று அவளைக்கண்டு, நான் மாலைகட்டுவதில் மஹாசமர்த்தன், எனக்கு நீ வேளைக்கு ஒருபிடி சாதம் மாத்திரம் நீபோட்டுக்கொண்டுவருவையாகில் உனக்குநான் மிகவும் உதவியாயிருக்கிறேனென்றான். அதற்கு அவள்-நீ ஒருகாலுங்கையும் அற்றவனாக இருக்கின்றாயே, நீ என்னவேலை செய்யப்போகிறாய்? ஆயினு

ம் ஆனைக்கொருபிடிசோறு வேலைக்குப்போடுவதனால் எனக்குப்புண்ணியமேயென்றுசொல்லி அவனை வீட்டில்வைத்துக்கொண்டாள். அவள் தன்னைப் பாராச்சமயம்பார்த்து மகிபன் மந்திர உச்சாடனத்தினால் தன்னுடையகாலையும் கையையும் வளரச்செய்துகொண்டு அதிவிரைவாக மாலையைத்தொடுத்துவைத்துவிட்டு, அவள் பார்க்கும்போது இடையென்று அம்மந்திரத்தைத் தலைகீழாக உச்சரித்துப் பழையபடியே அவயவக்குறுக்கமடைந்திருப்பான். இவனுடைய அற்புதவேலைத்திறத்தை அப்புஷ்பக்காரிதினமும் வியந்து வருவாள். இப்படியிருக்க, ஒருநாள் அவன் நெடுந[illegible]யில் வாசனைவீசத்தக்க திவ்வியமான முல்லைமலர்களைக்கொண்டுவந்து அவற்றால் இரண்டு அதிவிசித்திரமான அங்கிகளைச்செய்து அவற்றுள் ஒன்றில் தன்னுடைய மோதிரத்தை அப்புஷ்பக்காரிக்கும் தெரியாமல்கட்டி அவைகளை ஒருகையில் அடக்கத்தக்க அவ்வளவு சிறியனவாகச்சுருட்டிப் புஷ்பக்காரியினிடத்திற் கொடுத்து, இதைக்கொண்டுபோய் இப்பட்டினத்து அரசிளங்குமரிக்குச் சமர்ப்பிப்பாயாக என்றுசொல்லியனுப்பினான். அவற்றை அப்புஷ்பக்காரிமற்றமாலைகளோடுஞ்சேர்த்து அவ்வாறேகொண்டுபோய் அக்கன்னிகையினிடத்திற்கொடுக்க, அவள் அவற்றைப் பிரித்துப்பார்த்து மிகவும் வியந்து அப்புஷ்பக்காரியைநோக்கி, இவைகளை இவ்வாறுகொடுத்தது யாரென்றாள். அதுகேட்டுப்புஷ்பக்காரி--ஓ செல்வநாயகி! சிலதினங்களாக என்னிடத்தில் வலதுகரமும் இடதுகாலும் அற்ற அதிசுந்தரமுள்ள ஒருவன் வேலையில் அமர்ந்திருக்கிறான், இது அவனுடைய விசித்திரமானவேலையென்றாள். அதுகேட்டு அப்பெண்மணி அப்புஷ்பக்காரிக்கு நூறுவராகனைக்கொடுத்து, இதைக்கொண்டு நீ அவனுக்குத் தகுந்த உபசாரங்கள்செய்து அவனை வீட்டைவிட்டு வெளியேபோகாதபடி பத்திரமாய்ப்பாதுகாத்துவருவாயாக, உன்னிடத்தில் அவன் வேலையிலமர்ந்திருக்கும் விஷயத்தை ஒருவருக்கும் சொல்லாதிருப்பாயாக என்றுசொல்லி அனுப்பிவிட்டாள். உடனே அவ்வரசிளங்குமரி அவ்விரண்டு அங்கிகளையும் எடுத்துக்கொண்டு தன் சகோதரியாகிய காலகாந்தகபுரத்துச் செல்வச்சீமாட்டியைத் தனியே அழைத்து அவளுக்கு மகிபனுடைய மோதிரத்தைக் காட்டி, நம்மைக் கடுஞ்சிறையினின்றும் வெளிப்படுத்திநமக்கு உயிர்ப்பிச்சைதந்த புருஷோத்தமனாகிய மகிபன் நம்மூரில் புஷ்பக்காரிவீட்டில்வந்து சுகமாயிருக்கிறானென்று எல்லா விவரங்களையும் அவளுக்குத் தெரியப்படச்சொன்னாள். அதுகேட்டு அவள் பயங்கரனுடைய கட்டளையினாலே நம் ஊர் நகர்சோதனைக்காரர்கள் அவனுடைய வலதுகரத்தையும் இடதுகாலையும் வெட்டியிருக்கிறார்களே, அவன் எவ்வளவு குரூபியாகவும் அவலட்சணமாகவும் இருந்தபோதிலும் அப்படிப்பட்டவனைத்தான் நாம் மணஞ்செய்யவேண்டும் என்றாள். ஒருபுறத்திற் சந்தோஷமும் ஒருபுறத்துத் துக்கமும் உடையவர்களாகி அவ்விரண்டு கன்னிகையரும் நாளை எண்ணிக்கொண்டிருந்தார்கள்.



இப்படியிருக்கையில், மூன்றுமாதம்கழிந்தபின் அவ்விரண்டு அரசிளங்குமரிகளும் இனிவிவாகத்திற்குவேண்டிய பிரயத்தனங்களைச் செய்யலாமென்று கலிங்கபட்டினத்தரசனுக்குச் சங்கதிதெரிவித்தார்கள். உடனே அவன்போனந்தமடைந்து பயங்கரனாகிய கலிங்கபட்டினத்து நூதன அரசனையழைத்து இச்செய்தியைத்தெரிவிக்க, அவன் ஆனந்தபரவசனாகிக் குதூகலத்துடனே ஐம்பத்தாறு தேசங்களுக்கும் திருமணப்பத்திரிகை அனுப்புவித்து அங்கங்கள் [illegible]யும் இந்திரனுடைய நகரத்தைப்போல் சிங்காரிக்க[illegible]இந்த திருமணப்பத்திரிகையும் அக்கன்னிகையின் க்ஷேமசெய்தியையும் காலகாந்தகபுரத்தரசனும் வரப்பெற்றுக்கொண்டமாத்திரத்தில் புளகாங்கிதனாகி அநேகவரிசைகளோடுவந்து கலிங்கபட்டினத்தைச் சேர்ந்தான்.

விவாகத்திற்கென்று நியமிக்கப்பட்டநாள்வந்துவிட்டது. ஐம்பத்தாறு தேசத்தரசர்களும் தத்தம் இஷ்டஜனகுடும்பசமேதராய் கலிங்கபட்டினத்தை வந்தடைந்தார்கள். விவாகத்திற்குமுன்னே நடத்தவேண்டிய உபநயனம், நலங்குமுதலிய சடங்குகளை நடத்திக்கொண்டிருக்கையில் கலிங்கபட்டினத்து அரசிளங்குமரியும், காலகாந்தகபுரத்துச் செல்வநாயகியும் கூடியவரையில் பயங்கரனைத் தீண்டாமலே அவன்விஷயத்தில் அருவருப்பு பாராட்டிச் சுளித்தமுகத்துடனிருந்தார்கள். இதைக்கண்ட சர்வஜனங்களும் ஒருவிதவியப்படைந்திருந்தார்கள். இப்படியிருக்கையில், மாங்கல்யதாரணம்செய்ய இன்னும் ஐந்தாறுநிமிஷங்களிருக்கும்போது அவ்விரண்டுகலியாணப் பெண்களும் எழுந்துநின்று சபையாரைநோக்கி, பெரியோர்களே! கேளுங்கள், இதோ எங்களை மணஞ்செய்வதற்காக மணவாளக்கோலம் பூண்டிருக்கும் இவன் வாஸ்தவத்தில் மகிபனேயல்ல, எங்களுடைய சிறைகளைமீட்டு எங்களுக்குஉயிர்ப்பிச்சைதந்த பிராணநாயகனாகிய மகிபன் எங்களுடைய புஷ்பக்காரிவீட்டிலிருக்கின்றார், போய் அந்த மஹாபுருஷனைத்தக்க மரியாதையுடன் கொண்டுவாருங்கள், அம்மகிபனே தானென்று யாவரையும் மருட்டி இவ்வூர்ப் பட்டாபிஷேகத்தையும் இவன் பண்ணிக்கொண்டான், இவனுடைய வாஸ்தவமான பெயர் பயங்கரன், எங்களுடைய பிராணநாயகனாகிய மகிபன் பேராபத்துகளுக்கெல்லாம் முள்ளாகி எங்களை ரட்சித்தபோது மீண்டும் எங்களைப்பேராபத்திற்குள்ளாக்கிய பல்ஹீனன்தான் இப்பயங்கரன், இம்மட்டோ? தன்னை ஆதிமுதல் உயிரைப்போற் பாதுகாத்துவந்த மகிபனை நன்றியற்றவனாய்ச் சங்கிலித்தொடரையவிழ்த்துக்கொல்லத்துணிந்த நன்றிகெட்டவன் இவன், என்று இவ்வண்ணமாக ஆதியோடந்தமாய் எல்லாவிர்த்தாந்தங்களையும் சொல்லி முடித்தார்கள்.

இவ்வாறு இவர்கள் பேசிக்கொண்டிருக்கும்போதே மகிபனென்று இதுபரியந்தம் நடித்துத்திரிந்த பயங்கரன் என்சானுடம்பும் ஒருசானுடம்பாகக்குன்றி முகங்கறுத்து வெயர்த்து, நெஞ்சம்பறையடிக்கவும் மனச்சான்று உள்ளேவேதனைசெய்யவும் அவமானக்கடலில் மூ

ழ்கிப் பொங்கெழுந்து மேழ்மூர்ச்சையாய்விழுந்தான். இவனிப்படியிருக்கையில், அக்கன்னியர்கள்சொன்ன விஷயத்தைக் கண்டறியவேண்டுமென்று அங்கிருந்த யாவரும் திடீரென்று புஷ்பக்காரிவீட்டிற்குச்சென்று மகிபனைச் சர்வமரியாதைகளுடன் இட்டுக்கொண்டுவந்து கலியாணப்பந்தலில் நிறுத்தினார்கள். அப்போது அவன் வலதுகரமும் இடதுகாலும் அற்றவனாயிருப்பதைக்கண்டு, இது பயங்கரனுடைய செய்கையினால் விளைந்ததென்று யாவரும் ஊகித்தார்கள். அத்திருமணப்பந்தலிலே [illegible] நடந்த விர்த்தாந்தங்களையெல்லாம் கேட்போர்வியக்கு மன்முருகும்படி சொல்லி முடித்துத் தன் பிராணநேசனாகிய புலியரசனுக்கு உபதேசித்திருந்தமந்திரங்களின் உண்மைகளை அவர்களுக்கு மெய்ப்பித்து, பங்கப்பட்ட அவயவங்கள் வளரப்பெற்றுத் தன் நிஜசொரூபத்தோடு நின்றான். இதைக்கண்ட கன்னிகைகள் அடைந்தமகிட்சியை ஆயிரம் நாவுடைய ஆதிசேடனும்கூறச் சக்தியற்றவனாயிருப்பான்.

அப்போது மகிபன் அங்கிருந்த எல்லோரையும்பார்த்து நீங்கள் ஒருவரும் பயப்படவேண்டாம், தைரியத்தோடிருங்களென்று சொல்லித் தன் ஆப்தநேசனாகிய புலியரசைத் தியானித்தான். அதுயாவருடைய உள்ளமும் நடுங்கும்படி உடனே கலியாணப்பந்தலில் வந்து தோன்றி மகிபனை ஆலிங்கனஞ்செய்து முத்தமிட்டது. அப்புலியரசின் நன்றியின் பெருமிதத்தைப்பற்றி மகிபன் எல்லோர்க்கும் வியந்து பலவாறாகக் கூறினான். பின்பு மகிபன் தனியே சென்று பயங்கரனை விவாகஞ் செய்துகொள்ளும்படி காலகாந்தகபுரத்துக்கன்னியைவேண்டிப் பலவாறாகக் கேட்டுக்கொண்டும், அவள் அந்த சண்டாளனை மணம்புரிவதினும் பிராணத்யாகஞ் செய்துகொள்வதாய்க் கட்டுரை கூறினாளாகையால் வாக்குதத்தப்படியே அவளையும் தானே மணஞ்செய்ய இசைந்தான். விவாகச்சடங்குகளெல்லாம் பூர்த்தியாயின. அப்போது திரிமண்டலதேசத்தரசனாகிய திருவிராஜனென்னும் மகிபனுடைய பிதாவும் அவனுடைய மந்திரியாகிய திருவிலாசனும் அச்சபையின் ஓர்புறத்திலே எல்லா அதிசயங்களையும் பார்த்துக்கொண்டிருந்தார்களாகையால் அவர்கள் வெளியே வந்து மகிபனை ஆலிங்கனஞ்செய்து முத்தமிட்டார்கள். அவனும் அவர்களைக்கண்டு வியப்படைந்து தன் பத்தினிமார் சகிதமாக அவர்கள் பாதங்களில் வீழ்ந்துஆசீர்வதிக்கப்பெற்றான்.

உடனே மகிபன் மூர்ச்சையடைந்திருந்த சோதரனாகிய பயங்கரனிடத்திற்போய் அவனுக்குத் தகுந்த சிகிச்சைசெய்து ஆலிங்கனம்பண்ணி அவன் பாதத்தில் சாஷ்டாங்கமாய் விழ்ந்தெழுந்து அவனைப்பார்த்து, சோதரனே! என்னாலல்லவா இவ்வளவு அவமானம் உனக்கிப்போது நேரிட்டது? நான் இந்த இரண்டு கன்னிகைகளையும் பாதாள லோகத்திலிருந்து கொண்டுவரப் பிரயத்தனப்பட்டபோது அவர்களுக்குள்ஒருத்தியை உனக்கு மணஞ்செய்வித்து மற்றொருத்தியை



நான் மணஞ்செய்துகொள்ள நிச்சயித்திருந்தேன்; இப்போது உன்னை மணஞ்செய்துகொள்ளும்படி எவ்வளவுதூரம் நான் வற்புறுத்தாங்கத்தில் அவளுக்குப் புத்திமதி சொன்னபோதினும் அவள் உன் செய்கைக்காக உன்னை முகாலோகனமுஞ் செய்யமாட்டேனென்கிறாள். உன்னை மணஞ்செய்வதைக் காட்டிலும் அவர்கள் கன்னிகைகளாகவேயிருந்து சாதலே உத்தமமென்கிறார்கள், எக்காலத்திலும் மனதிலே விருப்பமில்லாதவர்களை மணஞ்செய்துகொளவதனால் பயனில்லை; ஆகையால் நீ உன் பிதாவுடன் வீடுபோய்ச்சேர்ந்து [illegible] சொல்லியனுப்பிவிட்டான்.

பிறகு மகிபன் தன் ஆப்தநேசனாகிய புலியரசனுக்குத் தக்க விருந்தளித்து நமஸ்காரம்செய்து அனுப்பிவிட்டுப் புஷ்பக்காரிக்கு வேண்டிய வெகுமதிகள் தந்து அவளை மகிழ்வித்தான். பிறகு அவன் பட்டாபிஷேகம் செய்துகொண்டு எல்லா அரசர்களையும் தத்தம் தேசங்களுக்கு விடைகொடுத்தனுப்பிவிட்டுத் தன் பத்தினிமாருடன் சுகமாய் வாழ்ந்துகொண்டிருந்தான்.

இவ்வாறு சுகமாய் வாழ்ந்துகொண்டிருக்கும் மகிபன் தினந்தோறும் பகவத்தியானஞ் செய்யும்போதெல்லாம் பகவானை நோக்கி, துன்பங்களெல்லாம் நீ இறுதியில் கிருபைசெய்யப் போகும் இன்பத்திற்கு அறிகுறியென்று பெரியோர்கூறிய ஆப்தவசனங்களை என் விஷயத்தில் மெய்ப்பித்த தயாநிதியே! சரணம், சரணம் என்று பணிந்து வந்தான்.

நல்லொழுக்கமும் ஈஸ்வரபக்தியும் பூரணமாயமையப்பெற்ற காரணத்தினாலன்றோ கடவுள் அப்புலியரசை மகிபனுக்கு ஆப்தநேசனாக்கிச் சகல உதவிகளையும் புரியச்செய்தனர்! மிருகஜாதியாயினும் அப்புலிக்கிருந்த நன்றியுடைமை பயங்கரனுக்கு இராமற்போனதனாலல்லவா அவன் ஈடேறாமல் அவமானமடைந்து துயரக்கடலில் மூழ்கினான்! ஆகையால் "நன்றிமறப்போர் நலமடையார்."

## சொற்சோர்வுபடேல்.

சொற்சோர்வுபடுதலாவது - ஒருவருக்கு மனமொழிமெய்களால் ஏதேனும் ஒன்றைச் செய்கிறேனென்று உறுதிமொழி கூறிப்பின் அவ்வாறு செய்யாமல் தவறுதலாம். ஒருவர் விரும்பிய ஒன்று நம்மால் இசைவதாயிருந்தால் மாத்திரம் ஸ்திரவாக்களிக்கலாமேயல்லாமல் இசையாவிடத்து அவ்வாறு செய்யலாகாது. நம்மை ஒருவர் ஒன்று கேட்கும்போது, அது நம்மாலாகுமா, ஆகாதா என்பதை முன்னர் தீரயோசித்து முடிவதாயிருந்தால் உறுதிகூறிப் பின் கூறியவண்ணம் நிறைவேற்றிச் சொல்லைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டும். முன்னே இசைவதாக நாம் நிச்சயித்துக் கூறிய ஒன்று

"ஒன்று நாமெண்ணத் தெய்வமொன்றெண்ணியது." என்னும் மொழிபோல் தெய்வகதியாய்ப்பின்புநம்மால் சாத்தியப்படாவிட்டால் அது தோஷமாகாது. அவ்வாறின்றி, நமக்குச் சம்மதமில்லாததும், நம்மால் சாத்தியப்படாததுமாகிய ஒன்றை ஒருவர் கேட்கும்போது, அதை ஒருபெரிய கௌரவமாக நினைத்து, நல்லது ஆகட்டும், நாளைக்குவா என்று கூறி அவர் நாளைக்குவந்தால், நாளைநாளையென்று நாளைப்போக்கி அவர்காலையொடித்து அவருக்குமனவருத்தமுங்காரிய நஷ்டமுமுண்டாகும்படி செய்யலாகாது. இப்படிச்செய்வது, அனேகருக்குச் சுபாவமாயிருக்கிறது. இது பெருந்தவறு. இதை அவர்கள் வேடிக்கையாக நினைக்கிறார்களேயல்லாமல் தோஷமென்று சிறிதேனு மனதிற்கொள்வதில்லை. ஒரு காரியம் என்றால் இசையாதென்று கூறி விடுவது ஒருவனுக்கு எவ்வளவும் வசையாகமாட்டாது. அது உலகத்தியற்கையாம். ஆனால் ஒருவருக்குச் சொல்லாலே ஆசைகாட்டிப் பின் தவறுதலால் செய்ந்நன்றி மறப்பதிலும் மிக்க தோஷம் விளைகின்றது. இக்கருத்தையமைத்தே நாலடியாரிலும்,

"இசையாவொருபொருளில்லென்றல்யார்க்கும்
வசையன்றுவையத்தியற்கை—நசையழுங்க
நின்றோடிப்பொய்த்தனிரைதொடீஇசெய்ந்நன்றி
கொன்றாரிற்குற்றமுடைத்து."

என்று கூறியிருக்கின்றது. கல்வி,ஒழுக்கம்,பொறை,நடுவுநிலைமைமுதலிய நற்குணங்களால் நிறைந்தபெரியோர்கள் ஒருகாலும் சொன்னசொல்தவறமாட்டார்கள். உலகம் புரண்டாலும் தாங்கள் கூறிய சத்தியவாக்கினின்றும் பெயரமாட்டார்கள். திருவள்ளுவதேவரும்-

"ஊழிபெயரினுந்தாம்பெயரார்சான்றாண்மைக்
காழியெனப்படுவார்."

என்று கூறியுள்ளனர்.

அயோத்திக்கரசனாயிருந்த தசரதமஹாராஜன் தன் பெறற்கரும் புத்திரசிகாமணியாகிய ஸ்ரீராமபிரானைக் காட்டுக்கனுப்பிவிட்டு, அவ்விராமமூர்த்தியினுடைய பிரிவாற்றாமையினால் தான் துக்கசாகரத்தில் மூழ்கி உயிர்துறந்தது - தன் மனைவியரில் ஒருத்தியாகிய கைகேசிக்கு, இரண்டுவரங்கள் வேண்டியபோது தருவதாக முன்காலத்தில் உறுதிகூறியிருந்தமையை நிராகரிக்கக் கூடாமையினாலன்றோ? சத்தியவாக்கிய பரிபாலனத்தைவிட, தசரதன் தன் கண்மணிபோன்ற ஆசைப்புதல்வனாகிய ஸ்ரீராமசந்திரன் சகல செல்வங்களையும் துறந்து சடைமுடி தரித்து எதிலரைப்போல் காட்டுக்குப்போவதையும், அதுபொருட்டுத் தன்னுயிர் நீங்குவதையும் ஒருபொருளாக மதித்தனனா? இக்கைகேசி நம்முடைய மனைவியர் மூவரில் ஒருத்திதானே, இவள் போனால் நமக்கு இன்னும் இருவரில்லையா? இந்த



துஷ்டை முன்பு எக்காலத்திலோ நாம் கொடுத்திருந்தவரங்களை இப்போது ஸ்ரீராமனுடைய பட்டாபிஷேககாலத்தில் நினைந்து, ஒருவரத்தால் இராமனைக்காட்டுக்கனுப்பவும், மற்றொன்றால் தன்புத்திரனாகிய பரதனுக்கு இராஜ்யபட்டாபிஷேகஞ்செய்யவும் பொறாமை மேற்கொண்டு கேட்கின்றனளே! இவள் மனம் என்னவலிது? இப்படிப்பட்ட துர்எண்ணமுடைய கொடியாளுக்குக் கூறியசொல்லை நிறைவேற்றாமல் அழிப்பதனால் வரும் தோஷமென்னை? என்றாவது சிறிதும் அத்தசரதர் சிந்தித்தாரில்லை. எது எப்படியானாலும் சொன்னமொழி தவறுதல் கூடாதென்னுந்துணிபையே முக்கியமான பொருளாக அத்தசரதர் கொண்டிருந்தாரேயன்றி வேறில்லை. ஆகையால் ஒருவருக்கு உறுதிமொழி கூறினால் அதை எவ்விதத்திலேனும் தவறாமல் நிறைவேற்றவேண்டும். இதற்குத் திருஷ்டாந்தமாக ஒரு சரித்திரம் கூறுகின்றோம்:—

அநேகவருடங்களுக்குமுன் ஸ்பெயின்தேசத்தில் மொராக்கோதேசத்தவராகிய மூர் என்னும்ஜாதியார் குடியேறியிருந்தகாலத்தில், ஸ்பெயின்தேசத்தானொருவன் மூர்ஜாதியானொருவனைக் கொலைசெய்துவிட்டு, அதிகாரிகள் அறிந்தால் ஆபத்து விளையுமெனக்கருதி ஓடிப்போய்விட்டான். அவ்வாறு தப்பித்துக்கொள்ள வெண்ணி ஓடுபவன்-தன்னைத்தேடிப்பின் தொடர்ந்து வருகிறவர்கள் காணாதபடிக்கு அவ்வூரிலுள்ள ஒருதோட்டத்தின் மதிற்சுவரேறி உள்ளே குதித்து அந்தத் தோட்டத்துக்குடையவனாயிருந்த ஒருமூர்ஜாதியானைக்கண்டு, அவனுடன் நடந்த விஷயங்களையெல்லாம் சொல்லித் தன்னைக் காப்பாற்றவேண்டுமென்று கேட்டுக்கொண்டான். எவனாயிருந்தாலும் தம்முடன் ஒருதரம் சாப்பிட்டவனைக் காப்பாற்றுவது மூர்ஜாதியாருடையவழக்கமாதலால், அந்தத் தோட்டத்துக்குச்சொந்தக்காரன், தன்னை வந்தடைக்கலமடைந்த ஸ்பெயின்தேசத்தானைக் காப்பாற்றுவதாகக் கூறும்சொல்லை அவனுக்கு நிச்சயப்படுத்து நிமித்தம் அத்தோட்டத்திலுள்ள பழமொன்றைப்பறித்துத் தானும் அவனுமாக அதைப்புசித்து அவனைப் பார்த்து, [illegible]மனமாகி இரவுவந்தவுடனே நீ தப்பிப்பிழைக்கும் உபாயந்தேடுகிறேன்,அதுவரையில் இங்கேயிரு என்று, அத்தோட்டத்திலுள்ள ஒரு வீட்டிற்குள்ளே அவனையடைத்துப் பூட்டிவிட்டுத் தன் வீட்டுக்குச்சென்றான். அத்தருணத்தில் திரளான ஜனங்கள் பெரிய அழுகைக் குரலுடன், அந்த மூர்ஜாதியானாகிய தோட்டக்காரனிடத்தில் வந்து, உம்முடைய குமாரனை ஒரு ஸ்பெயின் தேசத்தான் கொலைசெய்து ஓடிப்போய்விட்டானென்று கூறி அந்தப்பிணத்தைக்கொண்டுவந்து அங்கு சேர்த்தார்கள். அத்தோட்டத்திற்குடையான் தன்மகனுயிரைக் கவர்ந்தவன் தன்னைத் தோட்டத்தில் அடைக்கலமடைந்தவனே யென்று உடனே தெரிந்துகொண்டான். ஆயினும் தான் ஸ்பெயின் தேசத்தானாகிய அவனுக்குக்கூறிய உறுதிமொழி தவறவில்லை. அவன் அங்கிருந்த

கூட்டத்தவருக்கு யாதொரு சங்கதியும் வெளிப்படுத்தாமலே பொழுதுபோனவுடன் ஒருவருமறியாமல் தோட்டத்துக்குச் சென்று பூட்டைத்திறந்து ஸ்பெயின் தேசத்தானை வெளியே விடுத்துத் தன் குதிரைகளில் அதிவேகமாய் ஓடத்தக்க ஒன்றின்மேல் அவனையேற்றி, ஐயா! உன்னாற்கொல்லப்பட்டவன் என்னுடைய குமாரனே, நீ அக்கொலைத் தொழிலுக்குரிய தண்டனை யடையவேண்டியவன், ஆயினும் நீ என்னுடன் சாப்பிட்டிருக்கின்றனை, உன்னைக் காப்பாற்றுவதாக நான் உனக்கு உறுதிமொழி கூறினேன், ஆகையால் நான் என்மொழியைக் காப்பாற்றவேண்டியவனாயிருக்கின்றேன், இவ்விரவிலேயே எங்கேனும் தூரதேசத்துக்கோடித் தப்பிப்பிழை, என் குமாரனைக்கொன்ற குற்றவாளியாயிருந்தாலும் உன்னைத் தண்டிப்பது எனக்குஇப்போது முறைமையாகத் தோற்றவில்லையென்று சொல்லி அவனை க்ஷேமமாய் அனுப்பிவிட்டான். அவனல்லவோ சொன்னசொல் தவறாத சத்தியகீர்த்தி!

## ஓர் கரடியின் கதை.

### 19-ம். அத்தியாயம்.

(தொடர்ச்சி.)

விக்கிரமவீரன் பசியினால் வருந்துவது.

பிறகு அடிக்கடி சேடன் விக்கிரமவீரனைப் பற்பல சந்தைகளுக்கிட்டுக்கொண்டுபோய் ஜனங்களுக்கு வேடிக்கைகாட்டினனாகையால் அவன் விக்கிரமவீரனை முதலில் வாங்கியபோதிருந்ததைவிட நாளாவர்த்தியில் மிகவும் பணக்காரனாய் விட்டான். அவனுக்குப்பணம் கையிலேறவேறச் சோம்பலும் மேலிட்டது. மழைக்காலம் சீக்கிரம்வந்துவிடுவதலால் இக்கரடியை இழுத்துக்கொண்டுமழையிலும் பனியிலும் கிராமங்கள்தோறும்போய் அவஸ்தைப்படுவதைவிட வேறேமனதிற்கிசைந்த ஒரு தொழிலைச்செய்து ஜீவிக்கலாமென்று சேடன் அபிப்பிராயங்கொண்டான்.

வேனிற்காலத்திலிருந்த அவ்வளவு உற்சாகம் இப்போது விக்கிரமவீரனுக்கில்லையாகையால் அது சேடன் சொற்படி பொறுமையோடு ஆட்டம் ஆடிவந்தபோதினும் பார்ப்பவர்களுக்கு அது ஒருவகையான அசம்மதியோடு ஆடுவதாகத்தோற்றியது. விக்கிரமவீரனை இன்னதுசெய்வதென்று தோன்றாமல் சேடன் அதைமுழுமையும் விற்றேபோடலாமா? அல்லது வெப்பமாயிருக்கும் ஓரிடத்தில் ஆகாரமில்லாமலே மழைக்காலமுழுவதும் தூங்கிக்கொண்டிருக்கும்படி அதைப்பூட்டிவைத்து மழைக்காலம்போன பிறகு மறுபடியும் ஊர்கள்தோறும் இட்டுக்கொண்டுபோகலாமா? என்று தனக்குள் யோசனை பண்ணிக்கொண்டிருந்தான்.

இவ்வாறுசேடன் ஆலோசனை செய்துகொண்டிருக்கையில் ஒரு நாள் விக்கிரமவீரனை இட்டுக்கொண்டுபோகையிலே வழியில் ஒருவன் அனேக குதிரைகளை ஓட்டிக்கொண்டு அவனைவந்து சந்தித்தான். அக்குதிரைகளுக்குள்ளே சில பார்ப்பதற்கு மிகவும் கொடூரமாயிருந்தன. அவைகளுக்கு



ஜீனிமுதலிய முஸ்தீதுகள் கிடையா. ஆயினும் அவைகளுக்குக் கழுத்தில் ஒருபட்டையும் கடிவாளமுமாத்திரம் மாட்டியிருந்தன. அவைகளுக்குள் சில பார்ப்பதற்கு மிகவும் அழகாயும் மற்றும் சில சிறுமட்டங்களாயுமிருந்தன. சேடன் வழியில்யார் வந்தபோதினும் பேசுவதற்கு ஆவல்கொள்வது அவனுடைய இயல்பாயிருந்தபடியால், அக்குதிரைகளை இட்டுக்கொண்டு வந்தவனோடு கலந்து அவனைப்பார்த்து, அப்பா! நீ எவ்வளவுதூரம் போகிறாய்? நீ இட்டுக்கொண்டுபோகும் இவ்வளவு குதிரைகளையும் என்னசெய்யப்போகிறாய்? என்றுகேட்டான்.

அதுகேட்டு அவன் - இக்குதிரைகளை நான் சந்தைக்கு ஓட்டிக்கொண்டு போகிறேன், அச்சந்தையிடம் இங்கிருந்து நான்குமைல் தூரமிருக்கிறது, நான் அதிசீக்கிரம் போகவேண்டும், கிராமவாசிகள் மழைக்காலத்தில் குதிரைகளை வைத்து ஆதரிக்கக்கூடாதவர்களாயிருந்தாலும், இனி தங்களுக்குக் குதிரைகள் வேண்டியிராமற்போனாலும் அப்படிப்பட்ட குதிரைகளை அவர்களிடத்தில் நான்வாங்கிச் சந்தைக்குக்கொண்டுபோய் விற்பது வழக்கம், இவ்வாறு செய்வதனால் சில சமயங்களில் நல்லலாபங்கிடைக்கிறது, இவ்வருஷத்தில் என்சிரமைக்காக நல்லலாபங் கிடைக்குமென்றே நான் எதிர்பார்க்கின்றேன், இதோ நான் கொண்டுபோகும் ஒவ்வொரு குதிரையும் சண்டைக்காக வேண்டியிருக்கிறது, இன்னும் ஒருதடவை கூடச் சவாரிசெய்வதற்கு யோக்கியதையில்லாத குதிரைகளையும் இன்றையதினம் நான் நல்லவிலைக்கு விற்கப்போகிறேன் என்றான். இதுகேட்டுச் சேடன் அவனைப்பார்த்து, அப்பா! அச்சந்தையிலே குதிரைகள் தவிர வேறே எதுவாவது விற்கப்படுமோ? என்றுகேட்டான். அதற்கு அவன் ஆம், பன்றிகள் - நாய்கள்முதலிய எல்லாஜாதிபிராணிகளும் விற்கப்படும், நன்றாய்ப்பழகிச் சாந்தமாயுள்ள ஒரு யானையும் இன்று விற்கப்படுமென்று நான் கேள்விப்படுகிறேன். அதைப்பார்க்க எனக்கு மிகவும் ஆவலாயிருக்கிறதென்றான்.

இவைகளையெல்லாங்கேட்டுச் சேடன் விக்கிரமவீரனை விற்றுவிடுவதைப்பற்றி அவனோடு ஆலோசனைபண்ணினான். அதற்கொரு நல்லவிலைவருமானால் அதை விற்றுப்போடுவதே சரியென்று தீர்மானிக்கப்பட்டது. பிறகு அவ்விருவரும் அடுத்த ஒரு தேசத்திலே நடந்துகொண்டிருக்கிற பிரமாதமான சண்டையின் யுத்தாயுதங்களைப்பற்றி வாக்குவாதம் செய்துகொண்டே போகையில் அவர்கள் தத்தம் நியாயத்தைச்சாதிப்பதிலேயே நாட்டங்கொண்டிருந்ததினாலே அவர்கள்தாம் போய்க்கொண்டிருக்கும் சந்தையையும் கூடவரும் குதிரைகளையும் விக்கிரமவீரனையும் மறந்தார்களென்றே சொல்லவேண்டும். ஆனால் இவ்வாறு அவ்விருவரும் பேசிக்கொண்டே போகையில் ஒருபட்டினத்திற்குச்சமீபமாக வந்தபோது அப்பட்டினத்து வீதிகளில் ஜனங்களுடைய ஆரவாரத்தையும் பேரிரைச்சலையுங்கேட்டுத் தங்கள்சம்பாஷணையை நிறுத்த வேண்டியதாய் நேரிட்டது. உடனே அவர்கள் சந்தை கூடப்போகிற ஒரு பெரும் மைதானத் தண்டைவந்து சேர்ந்தார்கள்.

இவர்கள் அவ்விடத்திற்குப்போவதற்கு முன்னமே அனேகர் அவ்விடத்தில் ஏராளமாகக் கூடியிருந்தார்கள். சந்தையும் ஆரம்பித்துவிட்டது. குதிரைவியாபாரி அம்மைதானத்தின் ஒருபுறத்திலே நீண்டு தாழ்ந்திருந்த ஒரு கட்டடத்தின் கதவைத்திறந்து அக்குதிரைகளையெல்லாம் உள்ளே ஓட்டிவிட்டுச் சேடனைப்பார்த்து, உன் கரடியை இந்தவழியாக இட்டுக்கொண்டுவாவென்று சொல்லச் சேடனும் விக்கிரமவீரனும் அந்தலாயத்தின் ஒருபுறத்திலிருந்தகொட்டிலிற்போய்ச் சேர்ந்தார்கள். இவ்விடத்தில் சேடன் விக்கிரமவீரனை ஒருகம்பத்

தில் கட்டிவிட்டுத் தன்தோழனோடு வெளியே ஜனங்களிருந்த இடத்திற்குப் போனான்.

விக்கிரமவீரன் அக்கொட்டிலில் தனியே இல்லை. வெளிச்சம் எறஏறத் தூரத்திற் கட்டியிருந்த யானையைப்பார்த்து, விக்கிரமவீரன் இதென்ன பர்வதாகாரம்போல் ஒரு பெரும் மிருகமிருக்கின்றதே, இதுவரையில் எந்தபிராணிக்கும் இவ்வளவுபெரிய மூக்கிருக்கக்கண்டதேயில்லை, இந்தப்பிராணி தூங்கிக்கொண்டிருக்கிறதுபோல் தோன்றுகிறதென்று நினைத்து, அந்தப் பிராணிபேசுவதைக்கேட்க வேண்டுமென்னும் ஆவல்கொண்டு அதைத் தொந்தரை செய்யக்கூடாதென்றெண்ணிச் சும்மா அதைப்பார்த்துக்கொண்டேயிருந்தது. விக்கிரமவீரனுக்குச்சமீபத்தில் அவலட்சணமானநாயொன்றுதரையில் படுத்துக்கொண்டு, வெளியே கேட்கப்படும் இரைச்சலுக்கும் ஆரவாரத்திற்கும் ஏற்றபடி இடைவிடாமல் முறுமுறுத்துக் குரைத்துக்கொண்டிருந்தது. சமீபத்தில் ஒருகுரங்கு ஓர்குல்லாயையும் சொக்காயையும்போட்டுக்கொண்டு ஒரு பெட்டியின்மேல் உட்கார்ந்திருந்தது. அது இந்த நாயைப்பார்த்து அது கூச்சல்போடுவதுபோலவேதானும் நடித்துப் பல்லைஇளித்துப் பார்ப்போர்நகைக்கும்படி சேட்டைகள்செய்துகொண்டும், தன்கையிலிருந்த ஒரு குறுந்தடியைக்கொண்டு அந்நாயை அடிப்பதுபோல் நடித்துக்கொண்டுமிருந்தது. (இன்னும்வரும்.)

## விவாக பேதங்கள்.

உலகத்தில் மானிடர் அடையத்தக்க புருஷார்த்தங்கள் நான்கென வேதங்கூறுகின்றது. அவை: தர்மம்-அர்த்தம்-காமம்-மோட்சம் என்பனவாம். இவற்றிற்கு முறையே அறம்-பொருள்-இன்பம்-வீடுஎன்பனதமிழ்ப்பதங்களாம். இவற்றுள்நல்வழியில்ஒருவன்தேடிய பொருளைச் சற்பாத்திரத்தில்விநியோகிப்பதே அறமாகும். மனமொழி மெய்களினால் ஒருவருக்கும் தீங்குவிளைக்காமல் தான் மெய்வருந்தித் தேடுவதே பொருளாகும். ஒருவன் தன்மனதிற்கிசைந்த மனைவியோடுகூடி இல்லற தருமத்தை நடத்தி அதனாலாகிய சுகத்தையடைவதே இன்பமாகும். பிறகு நித்தியாநித்திய வஸ்து விவேகம் உதிக்கப்பெற்று உலகப்பற்றுக்களை அறவேவிட்டு ஈஸ்வரத்தியானத்தில் ஈடுபடுவதே வீடாகும். இப்புருஷார்த்தங்கள் நான்கையும் மேற்கூறியவாறேசுருக்கி ஒருவெண்பாவில் ஒளவைப்பெருமாட்டி அடியில்வருமாறு கூறியிருக்கின்றார்:—

"ஈதலறந்தீவினைவிட்டீட்டல்பொருளெஞ்ஞான்றுங்
காதலிருவர்கருத்தொருமித்—தாதரவு
பட்டதேயின்பம்பரனைநினைந்திம்மூன்றும்
விட்டதேபேரின்பவீடு."

இப்புருஷார்த்தங்கள் நான்கனுள் மூன்றாவதாயுள்ள இன்பத்தை அடையவேண்டிய ஒவ்வொருவனும் மனதிற்கிசைந்த மனைவியாளோடுகூடி இல்லறத்தை நடத்தவேண்டியவனாகின்றான். ஒருபெண்ணை அப்படிப்பட்டவன் தனக்கு மனைவியாக்கிக்கொள்வதற்காக அனாதி



யாய் இந்துக்களுக்குள்ளே சிலமார்க்கங்கள் ஏற்பட்டு நடைபெற்று வருகின்றன. கேவலமான மிருகங்கள், பட்சிசாதிகள் முதலிய அஃறிணைகள் நீங்கலாக மானிடவர்க்கத்தைச் சேர்ந்தவர்களெல்லாம் தமக்கு மனைவிமாரைத் தேடிக்கொள்ளுகையில் சாஸ்திரசம்மதமான சிலசடங்குகள் நடத்தித்தெய்வத்தைச்சாட்சியாகக் கூறிக்கொள்ளுகிறார்கள். இவ்வாறான சடங்குகள் தெய்வசாட்சியாக நடத்தப்பட்டால் மாத்திரம் விவாகம் நியாயமானதாகுமென்று நாகரீகம்பெற்ற எல்லாஜாதியாரும் அபிப்பிராயங்கொண்டு வருகிறார்கள். விவாகங்கள் பற்பலஜாதியாருக்குள் பற்பலவிதமாக நடத்தப்பட்டு வருகின்றன. இந்துக்களாகிய நம்மவர்களுக்குள் எத்தனைவிதமாக விவாகங்கள் அநாதியாய் நடத்தப்பட்டு வருகின்றனவோ அவற்றைச் சிறிது அடியில் விவரித்துக்காட்டுவோம்:—

இந்துக்களுக்குள்ளே வேதசம்மதமானவைகளும் யாவராலும் ஒப்புக்கொள்ளப் படத்தக்கவைகளுமான உத்தம மார்க்கத்தை அநுசரித்தமணங்கள் நான்கு. அவை, **பிரமமணம் - பிரஜாபத்யமணம் - ஆரிடமணம் - தெய்வமணம்** என்பனவாம். வேதத்திற்கு அவ்வளவாக உடன்பாடாகாவிடினும் ஒருவாறாக வேதத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டவைகளும் மத்திமமானவைகளுமான மணங்கள் நான்கு. அவை, **காந்தருவமணம் - ஆசுரமணம் - இராக்கதமணம் - பைசாசமணம்** என்பனவாம். அறநிலையைச் சேர்ந்தமுந்தியநான்கனுள் **பிரமமணமென்பது**-பிரமசரிய ஆச்சிரமத்திலிருக்கும் பிரமசாரி ஒருவனை வலிய அழைத்துக்கன்னிகையை அக்கினிமுன்னே தெய்வசாட்சியாக விவாகஞ்செய்து கொடுப்பதேயாம். **பிரஜாபத்ய மணமென்பது** - மாப்பிள்ளையைச்சேர்ந்த சுற்றத்தார் முதலியோர் அவனுடைய குணநுபவங்களையெடுத்துப் பெண்ணினது இனத்தாருக்குப் பன்முறையுங் கூறியபின் அவ்விருவருடைய குலம்-கோத்திரம்-சூத்திரம் முதலிய அம்சங்கள் ஒத்திருக்கின்றனவாவென்று பார்த்து அவ்விருவருடைய சுற்றத்தார்களும் அக்கினிமுன்னே தெய்வசாட்சியாக விவாகஞ்செய்து கொடுப்பதேயாம். **ஆரிடமணமென்பது** - பெண்ணின்சுற்றத்தார் சிலபசுக்களையும் எருதுகளையும் பிரதிபலனாகப் பெற்றுக்கொண்டு கன்னிகையைத்தக்க ஒருபிள்ளைக்குஅக்கினிமுன்னே தெய்வசாட்சியாக விவாகஞ்செய்து கொடுப்பதேயாம். **தெய்வமணமென்பது** - நெடுநாள் தவம் விரதமுதலியவற்றை அநுசரித்தகாரணத்தினாலே தெய்வகடாட்சமாக வேள்வியால் வந்த கன்னிகையை அவட்கு நிகரான தெய்வீகம்வாய்ந்த புருஷோத்தமனொருவனுக்கு அக்கினிமுன்னிலையில் சகலதேவர்கள், முனிவர்கள், இருடிகள் முதலியோர் சாட்சியாக விவாகஞ்செய்து கொடுப்பதேயாம். சீதாப்பிராட்டிக்கும் ஸ்ரீராமருக்கும் நடந்தேறிய விவாகமகோற்சவத்தையே இதற்கு உதாரணமாகக் கூறலாம்.

மத்திமமானமணங்களுள் காந்தருவமணமென்பது. - தமக்காகக் கொடுப்பாரும் கேட்பாருமின்றியே நாயகனும் நாயகியும் தனியிடத்திலே எதிர்ப்பட்டபோது இருவருடைய மனமும் ஒத்துவிட்டகாரணத்தினாலே தாமே ஒருவருக்கொருவர் உறுதிமொழிகூறிச் செய்துகொள்வதேயாம். அசுரமணமென்பது. - பிள்ளையின் சுற்றத்தார்கள் பெண்ணின் சுற்றத்தார்க்கு வேண்டியவரையில் திரவியமுதலியவற்றைப் பிரதிபலனாகத்தந்தும் பெண்ணுக்குப் பொன்னாலாகிய பூஷணமுதலியவற்றைச் சூட்டியும் பெண்ணைக்கொண்டுவந்து விவாகம் செய்துகொள்வதேயாம். இராக்கதமணமென்பது--பெண்ணும் பெண் இனத்தாரும் விவாகத்திற்குப் பலகாரணங்களினாலே உடன்படாமலிருக்கவும் நாயகன் சண்டைசெய்தோ வேறுவகையினாலோ வலிதிற் பெண்ணைக்கொண்டுவந்து விவாகஞ்செய்து கொள்வதேயாம். பைசாசமணமென்பது. - பெண்ணும்பெண்ணினத்தாரும்எவ்வகையாலும் உடன்படாமலிருக்கப் பிள்ளைகரவடமாகச் சென்று பெண் தூங்கிக்கொண்டிருக்கும்போது ஒருவருக்கும் தெரியாமல் விவாகஞ் செய்துகொண்டு வருவதேயாம்.

இவ்வாறு அறநிலையாலும் மறநிலையாலும் விவாகங்கள் நெடுங்காலமாக இந்தியாவிலே நடந்தேறிவருகின்றன. பிற இடங்களிலே நடக்கும் வேறேமாதிரியான மணங்களையும் இந்த எண்வித மணங்களிலே அடக்கலாமென்பதே இந்துக்களுடைய கோட்பாடாகும். இவ்விவாக பேதங்களின் யுக்தாயுக்தங்களை வாசிப்போர் தாமே கண்டு தெளிவாராக.

## லாப்லாண்ட் தேசத்தாருடைய அப்பியாசங்கள்.

லாப்லாண்ட்தேசம் மிகவும் சீதளமான பிரதேசமாகையால் அங்குள்ளவர்கள் விவசாயத்திற் பிரவர்த்திப்பதற்கு முற்றும் அசக்தர்களாயிருக்கிறார்கள். அவர்களுக்குள் சிலர் மீன்பிடிப்பவர்களாகவும் மற்றவர்கள் மலையில் வசிப்பவர்களாகவு மிருக்கின்றார்கள். மீன்பிடித்துஜீவிப்போர் ஏரி - குளம்-சமுத்திரம் ஆகிய இவற்றின் ஓரங்களிற் குடியிருப்பதும், மற்றவர்கள் கலைமான்களை மந்தைமந்தையாகவைத்துக்கொண்டு பர்வதங்களில் வசிப்பதுமாயிருக்கிறார்கள். பர்வதங்களில்வசிப்பவர்கள் மீன்பிடித்து ஜீவிப்போர்களைக் காட்டிலும் செல்வந்தர்கள். அவர்களுக்குள்ளே சிலர்க்கு ஐந்நூறுமுதல் ஆயிரம்வரையிற் கலைமான்களிருக்கின்றன. இவற்றை அவர்கள் பற்பல வகுப்புகளாகப் பிரித்து, ஏதேனும் ஒன்று இனத்தினின்றும் காணாமற் போகுமானாலும் அதை உடனே தெரிந்துகொள்ளும் சூட்சுமபுத்தியுடையவர்களாயிருக்கிறார்கள். இம்மான்கள் ஒவ்வொன்றுக்கும் இடு



குறிகளாகவும் காரணங்களாகவும் பற்பல பெயர்களிடப்பட்டு வருகின்றன.

அவர்களுக்குள்ளே ஆண்பாலார் மீன்பிடித்தும், வேட்டையாடியும், கலைமான்களைமேய்த்தும் பொழுதுபோக்கி வருகையில், பெண்பாலார் வலைகள் நெய்தும், மச்சங்களையும் கலைமான் மாமிசங்களையும் உலர்த்தியும், கலைமான்களின் பால்கறந்து அதைத்தோய்த்து ஆகாரத்திற்காகச் சித்தஞ்செய்தும், அம்மான்தோல்களைப் பதனிட்டும் நாள்கழித்துவருகிறார்கள். வீட்டுச்சமையல் வேலைகளைச் செய்பவர்கள் ஆண்பாலாரேயாம். அத்தேசத்தாருக்குக் கலைமான்கள் ஈஸ்வரப்பிரசாதமென்றே சொல்லவேண்டும். ஏனெனில், அவர்களுக்கு வேண்டிய தேகசவுக்கியங்கள் முதலிய யாவற்றிற்கும்அந்தப் பிராணிகளேமுக்கிய ஆதாரமாயிருக்கின்றன. கலைமானின் பாலும் மாமிசமும் அவர்களுடைய ஆகாரத்திற்கும், அதன்தோல் அவர்களுடைய உடைக்கும், குடியிருப்புக்கான கூடாரங்களுக்கும் படுக்கைகளுக்கும் உதவுகின்றன. அதன் நரம்புகளை அவர்கள் வேட்டைக்குவேண்டிய வில்லுக்கு நாணாகவும், பட்சிகளைப்பிடிப்பதற்கு வேண்டியவலைகளாகவும், மற்றும்பலகாரியங்களுக்காகவும் உபயோகித்துக்கொள்ளுகிறார்கள். ஐரோப்பாகண்டத்தின் தென்பாரிசத்திலுள்ள தேசவாசிகள் கலைமானுடையநாக்கை மிகவும்உருசியானபதார்த்தமென்றுகொண்டாடுகிறபடியால் லாப்லாண்ட்தேசத்தார் அந்நாக்குகளைப் பத்திரப்படுத்திப் பெருத்தலாபத்திற்கு விற்பனை செய்கிறார்கள்.

இக்கலைமான்கள் அத்தேசத்தவர்களுக்கு வாகனங்களாகவும் அமைகின்றன. அவர்களுடையதேசமுழுவதும் சற்றேறக்குறையஎப்போதும்பனிக்கட்டிகளால்மூடப்பட்டிருக்கிறபடியால்ஓரிடத்திலிருந்துமற்றோரிடத்திற்குப்போகவேண்டுமானால் அவர்கள்தரைமட்டமாயுள்ள ஓர்வகை வண்டிகளில் அக்கலைமான்களை வேறே கலைமான்களின் நரம்பைக்கொண்டேகட்டி ஓட்டுகிறார்கள். அப்பிராணிகள் எவ்வளவும் இளைப்படையாமல் ஓரேமூச்சாக எங்கும்நிற்காமல்குறைந்தது முப்பதுமைல்தூரம் அதிகவேகமாய்ப் போகத்தக்கன.

இவ்வாறுலாப்லாண்ட்தேசத்தாருக்கு வேண்டியவற்றையெல்லாங் கொடுக்கும் கலைமான்களைப் போஷிக்க அவர்களுக்கேதேனும் செலவுண்டா? ஒன்றுமேயில்லை. அந்தப்பிராணிகள் தமக்குவேலையில்லாதபோது சுவயேச்சையாய்ப் பாசிகளைத் தின்று திருப்தியடைகின்றன. பாசிகள் மாத்திரம் எங்கும் ஏராளமாய்ப் படர்ந்திருக்குமானால் லாப்லாண்ட்தேசத்தார்உலகத்திலுள்ள மற்றெந்தத்தேசத்தின் நீர்வளப்பத்தையேனும் நிலவளப்பத்தையேனுங்கண்டு பொறாமைப்படவேண்டிய அவசியமேகிடையாது. ஒருவருஷத்திலே சிறிதுகாலத்தில் மாத்திரம் பாசி அகப்படாமல் போகக் கூடும். அப்போது சிலக

லைமான்கள் மடியவேண்டியதுதான். அவ்வாறு அவைமடியுமானால் அவைகள்கொம்புமுதல் குளம்புவரையில் அத்தேசத்தாருக்கு எல்லாவகையாலும் உதவியாகுமேயன்றி எவ்வளவும் வீண்போகாது.

பசும்புல்லும் தலைகாட்ட முடியாத அவ்வளவு சீதளபிரதேசவாசிகளாகிய லாப்லாண்ட் தேசத்தவர்களுக்குப் பிராணாதாரமாகக் கலைமான்களைக் கடவுள் தந்ததும் அத்தேசத்தாரிடத்து அவர்வைத்த கருணையின் காரியமேயாம்.

## வர்த்தமானக் குறிப்புகள்.

**தீபவிசித்திரம்.**—அமெரிகாதேசத்திலுள்ள பாஸ்டன் என்னும் நகரத்திலே வீதிகளில் இரவிலேபோடப்படும் தீபங்கள்யாவற்றையும் ஏககாலத்தில் ஒருநொடியிலே ஏற்றுவதற்கும், நினைத்தபோது அவர்கள் யாவற்றையும் நிறுத்திவிடுவதற்கும் ஏற்ற ஒருமத்திய சூத்திரக்கருவியை அந்நகர் விசாரணைச் சங்கத்தார் உண்டாக்கியிருக்கிறார்களாம். இது யாவரும் வியக்கத்தக்க அநுகூலமான ஏற்பாடே.

**வாலுள்ளமனிதன்.**—அமெரிகாதேசத்தில் பார்லிங்டன் என்னும் நகரத்திலே ஒருவனுக்குப் பிறந்ததுமுதல் வால் வளர்ந்துகொண்டே வருகின்றதாம். அதை அவன் அசங்கியமாயிருக்கிறதென்று கருதிப்பிரயாசையுடன் அறுத்துக்கொண்டு வருந்தோறும் அது அவனுடன் பந்தயம்போட்டுக்கொண்டு வளர்ந்து வருகிறதாம். அதன் மூலகாரணத்தையறியச் சில தேகதத்துவசாஸ்திரிகள் ஆவலோடு ஆராய்ச்சிசெய்து வருகிறார்கள். ஆதியில் மனிதர்கள் எல்லோருக்குமே வாலிருந்ததென்றும், அப்போது அவர்கள் வானரரூபங்களாக விருந்தார்களென்றும், இப்போதும் நம்முடைய முதுகுத்தண்டின் அடிமுனையைச் சோதித்துப்பார்க்கையில் அதிலே ஒருகாலத்தில் வாலிருந்து இப்போது அற்றுப்போயுள்ள குறிகள் காணப்படுகின்றனவென்றும், வானரமென்னும்பதம் (வால்நரர்) வாலோடுகூடிய மனிதர்கள் என்பதன் சந்தியென்றும் சிலர் கூறுகிறார்.

**புதையல்.**—மாங்கீர் என்னும் நகரத்திலுள்ள ஒருபிராமணன் வறுமைக்கு ஆற்றாதவனாகித் தன்னிடத்து நெடுநாளாய் உதவியற்றதாக விருந்த ஒரு பூஜாபாத்திரத்தை விற்று ஜீவிக்கலாமென்றெண்ணி அதைக்கொண்டுபோய்த் தட்டாரொருவன் கையிற்கொடுக்க, அது பொன்னோ வேறு என்ன உலோகமோ என்று கண்டறியவேண்டி அதை அத்தட்டான் உடைத்துப்பார்க்கையில் அப்பாத்திரத்தின் தகட்டிற்குள்ளே ஒருகடிதாசிச்சுருள் அகப்பட்டது. அதில், பங்காளத்தின் வடமேற்குமாகாணத்திலே பீர்ஷாநேபாளக்கோயிலுக்கருகிலுள்ள கிணற்றின்பக்கத்தில் பதினொன்றுலட்சம்ரூபாயிருப்பதாக எழுதியிருந்ததாம். உடனே அவ்வந்தணன் அவ்விஷயத்தைத் துரைத்தனத்தாருக்குப் புலப்படுத்தி அவர்களுடைய உதவியினால் அப்புதையலைத் தேடிக்கொண்டிருக்கிறான். துரைத்தனத்தார் அவ்வேழைப் பிராமணனுக்குத்தக்க சன்மானம் அளிப்பதாக உறுதிமொழிகூறியிருக்கின்றார்களாம்.

**அவித்த உருளைக்கிழங்கு.**—அழுக்கடைந்த வஸ்திரங்களை அவித்த உருளைக்கிழங்கைக்கொண்டு சுத்திசெய்தால் வஸ்திரம் முற்றும் மாசுநீங்கிவிடுகிறதாம். பாரிஸ்தேசத்தில் அவித்த உருளைக்கிழங்கைச் சோப்புக்குப்பதிலாக உபயோகித்து வருகிறார்களாம்.

PRINTED AT THE ALBINION PRESS—MADRAS.

146680